பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 14 திங்கட்கிழமை (30.07.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 243

# இலங்கைக்கான இராணுவ உதவிகளை நிறுத்த அமெரிக்க செனேட் பிரேரணை

## மனித உரிமை மீறல்களுக்கு எதிரான நடவடிக்கை இது

கொழும்பு,ஜூலை30

இலங்கைக்கான அனைத்து இராணுவ உதவிகளையும் முடக்குவதற்கு அமெரிக்க செனேட்சபை முன்வந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2008ஆம் ஆண்டில் வெளிநாடுகளுக்கு அமெரிக்கா வழங்கும் இராணுவ உதவிகள் தொடர்பான உத்தேச சட்ட முன் வரைவின் கீழ் இலங்கைக்கான இராணுவ உதவிகளை முடக்கும் பிரேரணையை முன்வைக்க அமெரிக்க செனேட்சபை முடிவுசெய்துள்ளது.

இலங்கையில் சீர்குலைந்து போயுள்ள மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டி இந்த நடவடிக்கையை எடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறது என அந்த சட்ட முன் வரைவின் 690 ஆம் பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

690ஆம் பிரிவில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

இலங்கைக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதற்குரிய ஏற்றுமதி அனுமதி, இராணுவத் தளபாடங்கள் மற்றும் தொழில் நுட்ப விற்பனை அல்லது பரிமாறுதல் உள்ளிட்ட அனைத்தும் ரத்துச் செய்யப்படவேண்டும்.

இதேநேரம் இலங்கை அரசு மனித உரிமை மீறல்கள், நீதிக்குப் புறம்பான படுகொலைகளில் ஈடுபடுதல் மற்றும் சிறார்களைப் படையணியில் சேர்த்தல் ஆகிய வற்றில் ஈடுபடும் இராணுவத்தினரை நீதியின் முன் நிறுத்தும்போது இந்தத் தடை குறித்து மீள் பரிசீலனை செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க செனேட் சபையில் உள்ள பெரும் எண்ணிக்கையான காங்கிரஸ் உறுப்பினர்கள் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் குறித்த கவலையைத் தொடர்ந்து வெளிப்படுத்திய நிலையில் இத்தகைய கடும்போக்கை அமெரிக்கா செனேட் சபை

(08ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடைத் தேடுதலில் 29 சிவிலியன்கள் கைது!

கொழும்பு, ஜூலை 30

கொழும்பின் புறநகர்ப் பகுதியான ராஜகிரிய, வெலிக்கடைப் பகுதிகளில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விசேட தேடுதல் நடவடிக்கையின்போது மூவினங்களையும் சேர்ந்த 29 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மூவர் , றுகுணு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இருவர் உட்பட ஆறு முஸ்லிம் மாணவர்களும் அடங்குவர்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கான படை நடவடிக்கைக்கு தயார் நிலையில் பாதுகாப்புப் படை

கொழும்பு,ஜூலை 30

கிழக்குப் பிரதேசத்தை விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து விடுவித்த பாதுகாப்புப் படையினர் அடுத்து வன்னிப் பிரதேசத்தை மீட்டெடுக்கும் படை நடவடிக் கைக்கு ஆயத்தமாகி வருகின்றனர் - என்று சிங்கள பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

முதற்கட்டமாக இராணுவத்தினர் மேற்குக் கடலோர மன்னாரிலிருந்து கிழக்குக் கடலோர கொக்கிளாய் வரையிலான கடலோரத்தைப் பலப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர். அங்கிருந்து சிறிய குழுக்களாக முன்னேறிச் சென்று முல்லைத்தீவு உட்பட விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பிரதேசத்தில் தாக்குதல் மேற்கொள்ளப் படையினர் திட்டம் தீட்டியுள்ளனர்.

இந்நோக்கில் ஏற்கனவே ஓமந்தையிலிருந்து மன்னார் வரையில் மட்டுப்படுத்தப் பட்ட படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஓமந்தையிலிருந்து மணலாறு கொக்கிளாய் வரையிலான கிழக்குப் பிராந்தியத் துக்கென .

(08ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனப்பிரச்சினையில் பங்களிக்க பிளேயர் மறுப்பு!



இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளில் காத்திரமான பங்கு வகிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் தட்டிக்கழித்து விட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட மத்திய கிழக்குச் சமாதானத் தூதுவராகப் பதவி வகிப்பது பெரிதும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது என்பது ரொனி பிளேயரின் கணிப்பீடு என்று தெரிவிக்கப்படுகிறது.

எப்படியிருப்பினும் பிளேயர் பிரதமராக இருந்தபோது இலங்கை நிலைவரத்தில் அதீத அக்கறை செலுத்தி வந்துள்ளார். தற்போது அவர் மத்திய கிழக்குச் சமாதானத் தூதுவராகப் பதவியேற்றிருப்பதால் இலங்கை தொடர்பாக பிரிட்டன் மேற்கொள்ளும் முயற்சிகளில் அவர் தீவிர பங்கேற்பார் என எதிர்பார்க்க இயலாது என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இரு தசாப்த காலங்களாக, இலங்கை இனப்பிரச்சினை நீடித்து வருகின்றது. இதற்குத் தீர்வுகாண்பதற்கான முயற்சிகளுக்கு பிரிட்டன் பெரிதும் உதவும் என சமீபத்தில் பிரிட்டிஷ் தூதுவர் டொமினிக் சில்கொட் தெரிவித்திருந்தார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே ☞**

க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அளவையியலும் விஞ்ஞான முறைமையும் பாடத்துக்குரிய மாதிரி வினாத்தாள்கள் 5ஆம் பக்கத்தில்...

## 'சிக்குன்குனியா' நோய் மீண்டும் பரவும் அபாயம் குறித்து எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை30

இலங்கையில் மீண்டும் 'சிக்குன்குனியா' பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக எச்சரிக் கப்பட்டுள்ளது.

மாத்தளை மாவட்டத்தில் உக்குவளை பிரதேசத்தில் 15 பேர் 'சிக்குன்குனியா' நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக வைத்திய வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையான நோயாளர் மாத்தளை ஆஸ்பத் திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 15 பேர்

(08ஆம் பக்கம் பார்க்க)

### எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து

## தெற்கு மீனவர்கள் நேற்றுமுதல் தொழில் புறக்கணிப்புப் போராட்டம்!

கொழும்பு ஜூலை30

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து தென்னிலங்கை மீனவர்கள் தொழில் புறக்கணிப்பு போராட்டம் ஒன்றை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

தெற்குக்கரையோரப் பகுதிகளில் உள்ள கடற்கரைகளில் படகுகளை நிறுத்தி அவற்றில் எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிரான பதாகைகளைப் பறக்கவிட்டுள்ள கடற்றொழிலாளர்கள் நேற்று தொழிலுக்குச் செல்லவில்லை.

மூன்று தினங்கள் தொடர்ந்து இடம்பெறவுள்ள போராட்டத்தில் சகல கடற்றொழிலாளர்களும் பங்குகொண்[illegible]தாகத் தெரிவிக்கப்பட்டது.

(08ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கின் கிராம மட்ட அபிவிருத்திப் பணிகள் இராணுவ, பொலீஸ் அதிகாரிகள் தலைமையில்!

### கட்டளைத் தளபதி பன்னிப்பிட்டிய சுற்றறிக்கை

கொழும்பு,ஜூலை30

கிழக்கில் மேற்கொள்ளப்படும் சகல அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் படை அதிகாரிகளின் கண்காணிப்பிலும் தலைமையிலுமே நடைபெறும்.

குறிப்பாக கிராம மட்டத்தில் மேற்கொள்ளப்படும் சகல திட்டங்களும் இராணுவ அல்லது விசேட அதிரடிப்படை அல்லது பொலீஸ் அதிகாரி தலைமையிலான குழுவினாலேயே செயற்படுத்தப்படவேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுக்களில் அந்தந்தப் பிரதேச மக்களின் பிரதிநிதிகளுடன் கிராம சேவகர், இராணுவ அதிகாரி, பொலீஸ் அதிகாரி ஆகியோர் அங்கத்தவர்களாக இருப்பர்.

அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கிராம மட்டப் பணிகளை மேற்பார்வை செய்யும் அமைப்புகள் அல்லது செயற்குழுக்களில் இராணுவ, விசேட அதிரடிப்படை, பொலீஸ் பிரதிநிதிகள் சேர்த்துக்கொள்ளப்படுவது கட்டாயம் என்று கிழக்கின் பாதுகாப்புக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிப்பிட்டிய அரசாங்க உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட செயற்குழுக்கள் மாதத்தில் இரண்டு தடவைகள் கூடி அந்தந்தப் பகுதிகளின் அடிப்படைத் தேவைகள், அபிவிருத்தி வேலைகள் குறித்து ஆராய வேண்டும். சம்பந்தப்பட்ட பகுதியில் அவசரமாகத் தேவைப்படும் (08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உயிரிழந்த இந்திய அமைதிப் படையினருக்கு நினைவுச் சின்னம் எழுப்பப்படாதது ஏன்?

கொழும்பு,ஜூலை 29

இரு தசாப்தங்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற சண்டையில், மரணித்த இந்திய வீரர்களுக்கு இலங்கை அரசு ஞாபகார்த்த சின்னம் அமைக்க வில்லையே என இந்தியா மனக்கிலேச மடையலாம். அதேவேளை, அவர்களுக்கு இந்தியாவில் ஏன் ஞாபகார்த்த சின்னம் எழுப் பப்படவில்லை?

இந்தச் சண்டையில், இந்தியப் படைகளை வழிநடத்தி வந்த லெப்டினன்ட் ஜெனரல் கல்கத் இந்தக் கேள்விக் கணையைத் தொடுத்துள்ளார்.

லெப். ஜெனரல் கல்கத் 'இயான்ஸ்' செய்தி நிறுவனத்துக்கு அளித்துள்ள பேட்டியில் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வீரர்கள் இந்தியக் கொடியின் கீழ் இலங்கையில் போரிட்டவர்கள். போரில் உயிர்நீத்த தீரமிக்க வீரர்களைக் கௌரவிக்க இந்திய மண்ணிலும் நினைவுச் சின்னம் எழுப்பப் படவில்லை. இது குறித்து நான் கவலையடைகிறேன் - என்றார்.

இலங்கையில் இடம்பெற்ற இந்தியத் தலையீடு, நிதி ரீதியாகவும், மனித சக்தி ரீதியாகவும் எத்தகைய பெறுமதிக்குரியது என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் கூறியதாவது:-

அது பெறுமதிக்குரியதோ? இல்லையோ? அது பூகோள அரசியல் விவரண அட்டை மூலமாக எடைபோட வேண்டிய விடயம்.

இந்திய அமைதி காக்கும் படை பூரண மான வெற்றியை ஈட்ட அனுமதிக்கப்படவில்லை. 1989 டிசம்பரில் வி.பி. சிங்கின் அரசு பதவி ஏற்றது. அது அமைதிப் படை மீளப்பெறப்பட வேண்டுமென்ற உறுதிப்பாட்டிலேயே நிலைத்து நின்றது. இதனால் இது சாத்தியப்படவில்லை.

## இந்திய லெப். ஜெனரல் கல்கத் கேள்வி

இது விடயத்தில் கொழும்பின் வித்தியாசமான போக்கு, உயிர்நீத்த இந்திய வீரர்களின் குடும்பங்கள் மத்தியில் மன வேதனையைத் தோற்றுவித்துள்ளது.

இந்த வீரர்கள் இலங்கையின் இறையாண்மைக்காக உயிர்நீத்தவர்கள்.

இவர்களுக்கென ஒரு நினைவுச் சின்னத்தை இலங்கை உருவாக்கவில்லை. இது எமது வீரர்களையும், அவர்தம் குடும்பங்களையும் ஆழ்ந்த கவலைக்குள் ஆழ்த்தியுள்ளது.

1987ஆம் ஆண்டு ஜூலையில் கைச்சாத்தான இந்திய-இலங்கை உடன்படிக்கையின் 20ஆம் வருட நிறைவையொட்டி, லெப். ஜெனரல் கல்கத், தமது இல்லத்தில் வைத்து இப்பேட்டியை அளித்தார்.

இலங்கையைப் பொறுத்த மட்டில் என்ன?

### தமிழ் மாகாணம் இருப்பதை பிரேமதாசா விரும்பவில்லை

இதேவேளை, 1987 ஆம் வருடத்திய உடன்படிக்கையையும், இலங்கையின் தமிழர்களுக்கான உத்தேச அதிகார பகிர்ந்தளிப்பையும் பிரேமதாச அடியோடு வெறுத்துவந்தார். அத்துடன் கடும் ஆட்சேபனை கிளப்பியும் வந்தார். அவர் 'குரோத' மனப்பான்மை கொண்ட ஜனாதிபதி.

வடக்குக் கிழக்கில் தமிழ் மாகாணம் இருப்பதை பிரேமதாஸ விரும்பவில்லை. வடக்குக் கிழக்கில் ஒரு தமிழ் முதல் அமைச்சர் உறுதிப்பாட்டோடும், ஸ்திரப்பாட்டோடும் இருந்து விடக்கூடாது என்பதிலேயே அவர் கருத்தாக இருந்தார்.

அவசர கோலத்தில் அவர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களும், வெடி மருந்துகளும் வழங்குமாறு தம் அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டார். அச்சமயம் புலிகளின் செயற்பாடு பெருமளவில் குறைக்கப்பட்டிருந் தது.

"அச்சமயத்தில்தான் இனப்பிரச்சினையை இந்திய இராணுவத்தால் சரியாகப் புரிந்து கொள்ள முடிந்தது. இப்பிரச்சினை பல்லாயிரக் கணக்கானோரை பலிகொடுத்துள்ளது. இரத்தக் களரி இன்னும் தொடர்கிறது.

விடுதலைப் புலிகளைப் பற்றி கல்கத் குறிப்பிடுகையில்,

''எதிர்க்க முடியாத - அர்ப்பணிப்போடு கூடிய - முழுமையான தொழில் அமைப்பிலான போராளிகள் அமைப்பே விடுதலைப்புலிகள் இயக்கம். இதில் சந்தேகமில்லை. அதிக சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளையும் மனித வெடி குண்டுகளையும் கண்டுபிடித்தவர்களும் அவர்களே. அதன் பின்னரே காஷ்மீரிலும் மத்திய கிழக்கிலும் உலகின் ஏனைய போர்க் களங்களில் பயன்படுத்தப்பட்டன.

1987இன் பிற்பகுதியில், யாழ்ப்பாணத்தை இந்திய இராணுவம் கைப்பற்றியபோது, கல்கத் மேற்பார்வை அதிகாரியாக இருந்தார். பின்னர் 1988 ஜனவரி முதல் 1990 மார்ச் வரை, அமைதிப் படையின் தளபதியாக பதவி வகித்தார்.

(சி)

## சூட்டுக்காயத்துடன் ஏறாவூரில் சடலம்

ஏறாவூர் - ஐயன்கேணி சவக்காலை வீதியில் வைத்து துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் சனிக்கிழமை காலை மீட்கப்பட்டது. சடலத்தின் ஒரு பகுதி தீவைத்து எரிக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.'பட்ரிக்' ரகத்தைச் சேர்ந்த சாரம் அணிந்த நிலையில் சடலம் காணப்பட்டது.

குறித்த இளைஞர் வெளிப்பிரதேசத்தில் இருந்து கடத்திவரப்பட்டு கொலைசெய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஓட்டமாவடியில் முஸ்லிம் பெண் சூட்டுக்குப் பலி

வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஓட்டமாவடி பிரதேசத்தில் வைத்து இளம் பெண் ஒருவர் சனிக்கிழமை அதிகாலை இனம் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

செம்மண்ணோடை, பேக்கரி வீதியைச் சேர்ந்த இப்றாகிம் ஹிதாயா (வயது -16) என்பவரே இவ்வாறு சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இவரது சடலம் ஓட்டமாவடி பாடசாலை வீதியில் வைத்து மீட்கப்பட்டுள்ளது என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் தமது வீட்டில் இருந்த வேளை, ஆயுதபாணிகளால் கடத்திவரப்பட்டு சுட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. இந்த சம்பவத்திற்குச் கைத் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

# இராணுவ கட்டளைத் தளபதிகள் பலருக்கு அதிரடி இடமாற்றம்!

கொழும்பு, ஜூலை30

தொப்பிகல வெற்றியைத் தொடர்ந்து இராணுவத்தில் அதிரடி மாற்றங்கள் செய்யப்படுகின்றன. இதன் முதற்கட்ட நடவடிக்கையாக இராணுவக் கட்டளைத் தளபதிகள் பலர் இடம்மாற்றப்பட்டிருக்கின்றனர்எனத் தெரிவிக்கப்படுகின்றது!

இத்தகவலை 'த சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழ் வெளியிட்டுள்ளது.

அதில்மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :-

வன்னிப் பகுதிக்கான புதிய பாதுகாப்பு படைத்தளபதியாக மேஜர் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய கடந்த வெள்ளிக்கிழமை முதல் நியமிக்கப்பட்டுள்ளார். வன்னிப் பகுதியின் தற்போதைய கட்டளைத் தளபதியான மேஜர் ஜெனரல் உபாலிஎதிரிசிங்க இராணுவத் தலைமையகத்தின் பொது அதிகாரிகள் பிரிவின்பணிப்பாளராக பதவியேற்றுள்ளார்.

மணலாற்றுக்கான புதிய பிராந்தியத் தளபதியாக பிரிக்கேடியர் எம்.கே.ஜெயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். அதன் கட்டளைத் தளபதியாக முன்னர் பணியாற்றிய மேஜர் ஜெனரல் நிமால் ஜெயசூரிய வடபகுதியின் முன்னணிப் பகுதி பராமரிப்புக் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

வடபகுதியின் முன்னணிப் பகுதி பராமரிப்புக் கட்டளை அதிகாரியாக முன்னர் பணியாற்றியமேஜர் ஜெனரல் அப்துல்சாசீர் வட மத்திய பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இராணுவத் தலைமையகத்தில் பாதுகாப்பு இணைப்பாளராகப் பணியாற்றிய பிரிகேடியர் எஸ். சூரியபண்டார 53ஆவது சிறப்புப் படையணியின் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

53 ஆவது படையணியின் கட்டளைத் தளபதியாக முன்னர் பணியாற்றிய மேஜர் ஜெனரல் சிறீநாத் ராஜபக்ஷ இராணுவத் தலைமையகத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். இந்த மாற்றங்களை விட வேறுபல இடமாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன.

(சி)





Offer Offer Offer

Moniter - 12,500/=
UPS - 5900/=
DVD - RW - 5700/=
Printer - 7500/=
Casing - 3900/= முதல் 4900/= வரை
VGA Card 64 MP - 4500/=
TV Card - 4600/=
80 GB Harddis - 5600/=
Ram 512 DDR (112) - 3500/=
Fax Modem - 900/=
USB 1 GB - 1800/= (2 Year warranty)
USB 2 GB - 2800/= (2 Year warranty)
Keyboard - 500/=

அதிரடி Offer

மற்றும்
CD - RW, Sony DVD Combo, Scanner, Mother Board, Creative Speaker, Power supply, Blank CD, Optical Mouse, Head phone (பல வடிவத்தில் உண்டு) மற்றும் CD கவர் என்பனவற்றை நியாய விலையில் பெற்றுக் கொள்ள உடன் நாடுங்கள்.

MUSIC WORLD
141B, தபால் பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.


# உள்ளூர் உற்பத்திகளை குறைந்த செலவில் தெற்கே எடுத்துச்செல்ல அமைச்சர் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்.குடாநாட்டின் உள்ளூா உற்பத்திப் பொருள்களை தென் பகுதிக்கு குறைந்த செலவில் கொண்டு சென்று விற்பனை செய்யக்கூடிய ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா ஏற்பாடு செய்யவுள்ளார்.

தற்போதைய நிலையில் யாழ்.குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களை சந்தைப்படுத்தும் முகமாக தென் பகுதிக்குக் கொண்டு செல்கையில் போக்குவரத்திற்கென அதிக தொகையினை செலவு செய்ய நேரிடுவதால் உற்பத்தியாளர்கள் நட்டமடைகின்றனர். அதனால், பலர் உள்ளூர் உற்பத்திகளை கைவிடும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இவற்றை நேரில் கண்டறிந்து கொண்டதன் பேரில் அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தா குறைந்த செலவில் எடுத்துச் சென்று விற்பனை செய்யும் ஏற்பாட்டை விரைவில் செய்ய உள்ளதாக அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டிற்குப் பொருள்களை ஏற்றி வரும் கப்பல்கள் அவற்றை இறக்கிவிட்டு குடாநாட்டிலிருந்து திரும்பிச் செல்லும் போது வெற்றுக் கப்பல்களாகவே செல்வதால், அக்கப்பல்களில் குடாநாட்டு உற்பத்திப் பொருள்களை போக்குவரத்துச் செலவுடன் மாத்திரம் ஏற்றிச் செல்வதற்கான ஏற்பாடுகளை உரிய தரப்பினருடன் கலந்துரையாடி அமைச்சர் மேற்கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

## மரியன்னை பேராலய அபிஷேக வெள்ளி விழா நன்றி வழிபாடு

பேராலய அபிஷேக வேளையை நினைவுகூரும் முகமாக இன்று (30.07.2007) மாலை 5 மணிக்கு நன்றி வழிபாடும் நற்கருணை ஆசீரும் இடம்பெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ். மரியன்னை பேராலயம்.

பங்குத்தந்தை,
பேராலய அருட்பணிச் சபை.


## CD கள் மூலம் Spoken English

விற்பனையாகிறது CD கள் மூலம் ஆங்கிலம் சரளமாக பேச விரும்பும் அனைத்து தரப்பினருக்கும் மிகவும் உகந்தது. வீட்டில் இருந்தவாறே விரும்பிய வேளையில் விரும்பிய தடவைகள் கற்றுக்கொள்ளலாம். மிகவும் பயனுள்ளது, விலை குறைவானது. இது உங்கள் வீட்டு ஆங்கில ஆசிரியன் (4 ACD + 20 VCD) இப்பொழுது விற்பனையாகிக்கொண்டிருக்கிறது. பிரதிகளுக்கு முந்துங்கள்.

பிரதியாக்கம் செய்ய முடியாதது

கிடைக்கும் இடங்கள்

| | |
|---|---|
| பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். | கத்தோலிக்க அச்சக விற்பனை நிலையம், 360, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 021 222 9041 |
| துர்க்கா புத்தகசாலை, பஸ் நிலையம், சுன்னாகம். | மெடிலான்ட் பார்மசி, ஆலடி சந்தி, மானிப்பாய். மாலை 3.30 - 4.30 |
| இராஜலஷ்மி மல்ரி பலஸ், பஸ் நிலையம் எதிரில், நெல்லியடி, கரவெட்டி. | ரெனி மூக்கு கண்ணாடி அகம், 88, பிரதான வீதி, பருத்தித்துறை. |


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னத்துரை செல்வநாயகி



தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் குமரகோட்டம், கோண்டாவிலில் வசித்தவருமாகிய சின்னத்துரை செல்வநாயகி 28.07.2007 சனிக்கிழமை காலமானார்.

அண்ணார்வேலுப்பிள்ளை - ரேவதியின்அன்பு மகளும் பெரியதம்பி சின்னத்துரையின் அன்பு மனைவியும் தங்கநாயகி, பவளநாயகி, யோகேஸ்வரன், யோகநாயகி, சிறிதரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தயானி (France), ரதிகுமார் (Qatar), சதீஸ்குமார் (Germany), ஜெயக்குமார் (Qatar), தேவகுமார் (Qatar), ராஜ்குமார் (Qatar) ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (30.07.2007) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் இணுவில் காரைக் கால் இந்து மயானத்தற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரகோட்டம்,
கோண்டாவில்.

தகவல்:
(63026) வே.யோகேஸ்வரன். (சகோதரன்)

### துரைச்சாமி தனபாலசிங்கம் (தனம்)

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி தனபாலசிங்கம் (தனம்) நேற்று (29.07.2007) ஞாயிற்றுக்கிழமை மாலை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி வடக்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோண்டாவிலில் சிவபூமி மன விருத்திப் பாடசாலையின் 3ஆம் ஆண்டு நிறைவு விழா சனிக் கிழமை இடம்பெற்றது.

அந்நிகழ்வில் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தலைமையுரை நிகழ்த்துவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழகபதில் துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேல் உரையாற்றுவதையும் பாடசாலை மாணவிகளின் அணிவகுப்பையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

# தீவகத்தில் வைத்தியர்களுக்கு பற்றாக்குறை 37 பேருக்கு பதிலாக 7பேரே கடமையில்!

கொக்குவில்,ஜூலை30

தீவகப்பகுதியில் பெரும் வைத்தியர் பற்றாக்குறை நிலவுவதாகச் சுகாதார திணைக்களத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறினார்.

தீவகப் பகுதிக்கு குறைந்த பட்சம் 37 வைத்தியர்கள் பணியாற்ற வேண்டிய தேவை உள்ளது என்றும்-

ஆனால், 7 வைத்தியர்கள் மட்டுமே தற்போது பணியாற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தீவகப் பகுதிகளில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறை காரணமாகக் கடமையாற்றும் வைத்தியர்கள் அப்பகுதிகளில் சுழற்சி முறையில் பணியாற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் காரைநகர், வேலணை, ஊர்காவற்துறை, நயினாதீவு ஆகிய பகுதிகளில் பணியாற்றும் வைத்தியர்கள் ஓய்வு பெற்று பின்னர் மீள்நியமனம் செய்யப்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

புதிதாக வைத்தியர்கள் நியமனம் செய்யப்படாமையும் தீவகப் பகுதியின் போக்குவரத்து இடையூறும் காரணமாக அங்கு பணியாற்றுவதற்கு வைத்தியர்கள் பின்னடித்து வருவதாகக் கூறப்படுகின்றது. இதன் காரணமாக தீவகப் பகுதியின் வைத்தியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யமுடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான துர்ப்பாக்கிய நிலையால் வியாதியினால் பீடிக்கப்பட்டு அவதியுறும் பொதுமக்கள் குறித்த நேரத்தில் சிகிச்சை பெறமுடியாத கஷ்டநிலை நீடிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (1)

## மாவையில் இன்று சண்முகார்ச்சனை

யாழ்ப்பாணம் ஜூன் 30

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் காம்யோற்சவத்தின் 14ஆம் நாள் திருவிழாவான இன்று விசேட சண்முகார்ச்சனை நடைபெறும்.

திருவிழாக் காலத்திலும் தினமும் ஸ்னபனாபிஷேகம், அலங்காரப் பூசைகள், ஆராதனைகள், பிரார்த்தனைகள், திருமுறை ஓதல், மகேஸ்வர பூசை என்பன இடம் பெற்று வருகின்றன.

இன்றைய திருவிழாவில் திருப்புகழ இசையோடு சண்முகார்ச்சனை சிறப்புற நடைபெறும். பத்தொன்பதாம் திருவிழாவான எதிர்வரும் ஓகஸ்ட் ஆறாம் திகதி திங்கட்கிழமை திருக்கார்த்திகை விழாவும் சண்முகார்ச்சனையும் வெகு சிறப்பாக நடைபெறும். (அ)

## சண்டிலிப்பாய்ப் பிரதேசத்துக்கு உடனடியாக அத்தியாவசியப் பொருள் அனுப்பக் கோரிக்கை

வலிதென்மேற்கு,ஜூலை30

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேசத்தில் கூட்டுறவு சங்கக் கடைகளில் அரிசி, சீனி, மா ஆகியவற்றுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதாகவும் இவற்றை இப்பிரிவிலுள்ள ப.நோ.கூ சங்கங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் யாழ். அரசாங்க செயலக திட்ட பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரிசி, சீனி, மா ஆகியவற்றுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவி வருவதாக மக்களில் பலர் தமது கவனத்திற்கு நேரடியாக கொண்டு வந்து முறைப்பாடு செய்துள்ளனர். ஆகவே இது விடயமாக நடவடிக்கை மேற்கொண்டு இப்பிரதேசத்திலுள்ள மானிப்பாய் மற்றும் பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு மேற்படி பொருள்களை விநியோகிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்றும் பிரதேச செயலர் வேண்டுகோளில் கோரியுள்ளார்.

இதே வேளை மேற்படி அரிசி, மா, சீனி மற்றும் பால்மா ஆகியன இப்பிரதேசத்திலுள்ள தனியார் கடைகளில் மிகவும் அதிகரித்த விலைகளில் விற்கப்படுவதாக மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (1-135)

## வடமராட்சி வலயத்துக்கு இரு நியமனங்கள்

உடுப்பிட்டி,ஜூலை30

வடமராட்சிக் கல்வி வலயத்துக்கு இரு உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் வடக்கு மாகாண கல்வியமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வலய அலுவலகத்தில் கணித பாட சேவைக்கால ஆலோசகராகப் பணியாற்றிய மகாலிங்கம் வின்சன் கோமன் ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளராகவும்-

ஹாட்லிக் கல்லூரியின் உயிரியல் பாட ஆசிரியராகப் பணியாற்றிய திருமதி ரோகினி கருணேஸ்வரன் விஞ்ஞான பாட உதவிக் கல்விப்பணிப்பாளராகவும்- நியமிக்கப்பட்டுள்ளனர். (1)

## சாவகச்சேரி நகர சபையின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்ஜூலை30

சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் இன்று (30/07/2007) ஆரம்பமாக இருக்கின்றன.

உள்ளூராட்சி வாரம் தொடர்பான கருத்தரங்கு இன்று மீசாலை பொது நூலக மண்டபத்திலும் நாளை முன்பள்ளிச் சிறார்களுக்கான வினோத உடைப் போட்டிகள் நகர சபை மைதானத்திலும் எதிர்வரும் முதலாம் திகதி புத்தகக் கண்காட்சி சாவகச்சேரி பிரதான நூல் நிலையத்திலும் இடம் பெறும். எதிர்வரும் 2ஆம் திகதி மாணவர்களுக்கான கட்டுரை, பொது அறிவு எழுத்துப் போட்டிகள் நகரசபை கேட்போர் கூடத்திலும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சனசமூக நிலைய அங்கத்தவர்களுக்கான கட்டுரைப் போட்டிகள், வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கான பொது அறிவுப் போட்டிகள், சிரமதானங்கள் உட்பட பல நிகழ்வுகள் தொடர்ந்து இடம் பெறுமென நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தெரிவித்தார். (1-207)

## கோண்டாவில் கிழக்குப் பகுதியில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை30

கோண்டாவில் கிழக்கில் உள்ள அன்னுங்கை, வீரபத்திரர் வீதி ஆகிய இடங்களில் பெருமளவில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் இடம்பெற்று வருவதாக அப்பகுதியில் உள்ள பொது அமைப்புகளும் சமூக நலன்விரும்பிகளும் தெரிவிக்கின்றார்கள்.

கடந்த காலத்தில் இப்பகுதிகளில் பரவலாக கசிப்பு உற்பத்தி விற்பனை இடம் பெற்ற போதிலும் சிலரின்

தலையீட்டைத் தொடர்ந்து நிறுத்தப்பட்டிருந்தது.

தற்போது மீண்டும் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் இப் பகுதிகளில் பெண்கள் தனித்து செல்ல முடியாத நிலைமையும், வீடுகளில் மாணவர்கள் கற்கமுடியாத நிலையும் உருவாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

உரிய அரச அலுவலர்கள் நடவடிக்கையெடுக்கப் பின்நிற்பதாகவும் பலரும் குற்றஞ்சாட்டுகின்றனர். (1)

## தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்திக்கான 24 திட்டங்களுக்கு ரூ.15 லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்ஜூலை30

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் தென்மராட்சி பிரதேசத்தில் 24 வேலைத்திட்டங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் இருந்து 15 லட்சத்து 30ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலகம், கல்வி வலயம், சாவகச்சேரி பிரதேசசபை, இலங்கை மின்சார சபை ஆகியவற்றின் ஊடாக இவ்வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி பத்மினி சிதம்பரநாதன் 7 வேலைத் திட்டங்களுக்கும், கஜேந்திரகுமார் பொன்னம் பலம் 6 வேலைத்திட்டங்களுக்கும், ந.ஸ்ரீகாந்தா, சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் தலா 4 வேலைத் திட்டங்களுக்கும் க.சிவனேசன் 3 வேலைத்திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## சமய சந்நிதிகளில்

சுழிபுரம்,ஜூலை30

சுழிபுரம், கம்பனை அம்பாள் ஆலயத்தில் ஆடிச் செவ்வாய் வழிபாடு விசேட அபிஷேக ஆராதனைகள், கூட்டுப்பிரார்த்தனைகள் நடைபெற்று வருகின்றன. மூன்றாவது பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. (1-28)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை30

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீபழனி ஆண்டவர் ஆலய அலங்காரத் திருவிழாவை யொட்டி வேல் பவனி இன்று நடைபெறவுள்ளது.

நாட்டுச் சூழ்நிலை காரணமாக இவ்வருடம் ஆலயத்திலிருந்து புறப்படும் வேல் பவனி டச்சு வீதி, ஹென்ஸ்மன் வீதி, பருத்தித்துறை வீதி, செதுக்கல் பிள்ளையார் வீதி ஆகிய வற்றினூடாக ஆலயத்தைச் சென்றடையுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடங்களில் சாவகச்சேரி நகர்ப் பகுதி ஊடாக வேல் பவனி இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (1-207)

* * *

யாழ்ப்பாணம் ஜூன் 30

கல்வியங்காடு இலங்கை நாயகி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10தினங்கள் நடைபெற உள்ளது. இம்மாதம் 9ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடை பெறவுள்ளன.

மறுநாள் சனிக்கிழமை பூங்காவனத திருவிழாவின்போது அம்பாள் தெரு வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறும். (1-79)

# ஈழத்தமிழரை திருப்பி அனுப்புவது இனத்தின் அழிவுக்கு வித்திடுவதாகும்

## பிரிட்டிஷ் பிரதமருக்கு அமைச்சர் சந்திரசேகரன் கடிதம்



கொழும்பு,ஜூலை30

பிரிட்டனில்அகதி அந்தஸ்துக் கோரும் ஈழத்தமிழரை திருப்பி அனுப்ப எடுக்கும் முடிவு ஓர் இனத்தின் அழிவுக்கு வித்திடும் செயலாக அமைந்து விடும்.

பிரிட்டிஷ் பிரதமர் கோடன் பிறவுணுக்கு அனுப்பியுள்ள அவசர கடிதத்தில் அமைச்சர் பெ.சந்திரசேகரன் இப்படிக் கூறியுள்ளார்.

பிரிட்டனில் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட ஈழத் தமிழர்களை திருப்பி அனுப்பும் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கோரி அமைச்சர் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தொடரும் போர்ச்சூழல் காரணமாகவே ஈழத்தமிழர்கள் அரசியல் தஞ்சம் கோரி வருகின்றார்கள்.

இன்று இலங்கையில் நிலவும் நெருக்கடியான நிலையில் தஞ்சம் கோரியுள்ளவர்களைத் திருப்பி அனுப்பினால் அவர்களுக்கு உயிராபத்து ஏற்படும்.

இலங்கையும் பிரிட்டனும் கலந்துரையாடி, திருப்பியனுப்புபவர்களுக்கு உயிர் உத்தரவாதம் வழங்க இலங்கை அரசு இணங்கினால் திருப்பி அனுப்பலாம். உயிர் உத்தரவாதம் பெறாமல் திருப்பி அனுப்பினால் அவர்களது வாழ்வின் முடிவுக்குப் பிரிட்டனே பொறுப்பேற்க வேண்டிவரும்.

பிரிட்டன் திருப்பி அனுப்பும் முடிவை எடுக்கும் பட்சத்தில் ஏனைய நாடுகளும் அகதி அந்தஸ்துக் கோருவோரைத் திருப்பி அனுப்ப ஆரம் பிக்கும்.

உயிர் உத்தரவாதம் இன்றி இலங்கைக்கு அவர்கள் வருவார்களேயானால், அது ஓர் இனத்தின் அழிவுக்கு வித்திடும் செயலாக அமையும் என்றுள்ளது. (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் - யாழ். கிளை

**Part time Pharmacist - (பகுதிநேர மருந்தாளர்)**

மேற்படி பதவிக்காக, பயிற்சி பெற்ற சான்றிதழ் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு 10-08-2007 இற்கு முன்னதாகச் சான்றிதழ்களுடன் அனுப்பிவைக்கவும்.

கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், 73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(கி/53069)



வசீகர தோற்றத்திற்கு

## சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)




யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
**'சிவா நறுமணப் பூங்கா'**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone: 222 2567

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250



## SRI LANKA BOOK DEPOT
## பாடப் புத்தகங்கள் விற்பனையாகின்றன

* தரம் 1 முதல் உயர்தரவகுப்பு வரையான மாணவர்களுக்குரிய அனைத்து வகையான (தமிழ், ஆங்கிலம், சிங்களம்) புதிய பாட நூல்கள், செயல் நூல்கள், பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் அனைத்து வகையான - இந்திய வெளியீடுகள் யாவும் விற்பனையாகின்றன.

இன்று (30.07.2007) திங்கட்கிழமை முற்பகல் 9மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

* ஏமாற்றத்தைத் தவிர்த்துக் கொள்ள முந்துங்கள்.

குறிப்பு : அப்பியாசக் கொப்பிகளான இரட்டைறூல் / பெரிய சதுர றூல் / நான்குறூல் என்பனவும் வந்துள்ளன.

தொடர்புகளுக்கு:
**ஸ்ரீலங்கா புத்தகசாலை,**
234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2573

(சி/53061)


### பாடசாலை விடுமுறை வெள்ளியன்று ஆரம்பம்

அரசாங்கப் பாடசாலைகள் இரண்டாம் தவணை விடுமுறைக்காக எதிர்வரும் வெள்ளிக் கிழமை மூடப்பட்டு செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மூன்றாந் தவணைக்காகத் திறக்கப்படும்.(1-111)


## PMC யின் விசேட அறிவித்தல்

PMC யின் Master of English - VCD இற்கு கமலக்கண்ணன் திருமண சேவையில் பதிவு செய்தவர்கள் 10-08-2007 இல் திருமண சேவை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

171/7, மனோன்மணி அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(63621)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன்
**அ.உதயகுமார்**
அவர்கள் இன்று 30-07-2007 BMICH இல் நிகழும் MSc. in Computer Science பட்டம் பெறுவதையிட்டு அவரை வாழ்த்துகின்றோம்.

கொழும்பு. (63022) **மோகனா.**



## இரண்டாவது பிறந்த நாள் வாழ்த்து




(62827)



சுவிஸில் வசிக்கும் ச.தங்கவேல் (வேல்)
ஜெயலட்சுமி (ஜெயா) தம்பதியரின்
செல்வப் புதல்வன் ஷயந்த் தனது இரண்டாவது
பிறந்தநாளை இன்று (30-07-2007)
திங்கட்கிழமை சுவிஸில் உள்ள தனது
இல்லத்தில் வெகுவிமரிசையாகக்
கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, நவாலி
முருகமூர்த்தி கோயிலடியில் வசிக்கும் அப்பம்மா
பாக்கியம், காரைநகர் பெரியமணலில் வசிக்கும்
அம்மம்மா நாகேஸ்வரி, மாமா ஜெயராதவன்,
டென்மார்க்கில் வசிக்கும் பெரியப்பா ஜெயமோகன்
குடும்பத்தினர், கனடாவில் வசிக்கும் பெரியத்தை
ஜெயபவானி குடும்பத்தினர், சுவிஸில் வசிக்கும்
சின்னத்தை ஜெயகௌரி குடும்பத்தினர், கனடாவில்
வசிக்கும் பெரியப்பா கோடீஸ்வரன், நவாலியில்
வசிக்கும் ஆசையப்பா விஸ்வரூபன் குடும்பத்தினர்
மற்றும் உற்றார், உறவினர் எல்லோரும் ஷயந்தை
ஐயனார் அருளால் பல்கலையும் கற்றுச் சகல
சௌபாக்கியங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம்
நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.




30 07 2007

**ச.தங்கவேல் (வேல் - அப்பா, சுவிஸ்).**



## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## A.R. ஸ்ரீ கிருஸ்ணமூர்த்தி

ஆண்டுகள் பல சென்றாலும்
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:

19/1 A, B.A.தம்பிலேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (62003)


### நீர்வேலியில் வாழைக்குலை திருட்டு அதிகரிப்பு

கோப்பாய், ஜூலை 30

நீர்வேலிப் பிரதேசத்தில் வாழைக் குலைகள் தினமும் அதிகளவில் திருடப்பட்டு வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பகல் நேரங்களில் நோட்டமிட்டு மாலை வேளைகளில் வீதியோரங்களில் உள்ள வாழைக்குலைகளே வாள் 'பிளேட்'டினால் அரிந்து திருடப்படுவதாகவும் -

இதனால் ஓசையின்றி வாழைகுலையை வெட்டலாமெனவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது வாழைப்பழங்கள் கிலோ 40 ரூபாவிற்கு மேல்கொள்வனவு செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. (1-72)

### முன்பள்ளி ஆசிரியர் கருத்தரங்கு நாளை

யாழ் பிரதேச முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் கருத்தரங்கு ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சித் திணைக்களத்தின் சமூக அபிவிருத்தி [illegible] தலைமையில் இக் கருத்தரங்கு இடம்பெறும்.(1)




உலகப் புகழ்பெற்ற ஆன்மீக குரு
தவத்திரு
**ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்** அவர்களின்
## வாழும் கலைப் பயிற்சிகள்

ஆர்ட் எக்ஸெல் (ART EXCEL-All Round Training in Excellence)
[8 - 16 வயது வரையானவர்க்கு]
பயிற்சி நாள் : 04.08.2007 தொடக்கம் 08.08.2007 வரை
நேரம்: காலை 8.30-11.30 மணி அல்லது பிற்பகல் 1.30-3.30 மணிவரை

### அடிப்படைப் பயிற்சி

(18 வயதிற்கு மேற்பட்டோருக்கானது)
(பிராணாயாமம், பாஸ்திரிகா, சுதர்சனகிரியா மூச்சுப்பயிற்சி உள்ளடக்கியது]
இலவச அறிமுக உரை திங்கள் மாலை 3.30 மணி
பயிற்சி நாள் : 31.07.2007 தொடக்கம் 05.08.2007 வரை
நேரம்: காலை 6.30-8.30 மணி அல்லது பிற்பகல் 3.30-5.30
இடம்: கம்பன் கோட்டம், கோயில் வீதி, நல்லூர்.

தொ.பே: 0777250879
0779434879
மேலும் விவரங்களுக்கு
சர்வதேச வாழும் கலை அறநிறுவனம்,
(62975)



## 5 ஆம் வருட நினைவஞ்சலி



அமரர் மார்க்கண்டு நாகரெத்தினம்
(உரிமையாளர், நாகரெத்தினம் & Co)
திதி:- 30-07-2007

பாசத்தின் உறைவிடமாய்
எங்களுடன் வாழ்ந்து
மறைந்த எம் அன்புத்தெய்வமே!
ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
உம் நினைவுகள் எம்மைவிட்டுப் பிரியாது.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம். (62983)
உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சுடர் 19

## க.பொ.த [உ/த] மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்

# அளவையியலும் விஞ்ஞானமுறையும்

ஆக்கம்:- கு.வேல்சிவானந்தன் (B.A.Hons Philosophy-SP.L, Dip.in.Edu, SLPS-1)

"விஞ்ஞானமுறை" பாடத்தின் வினாக்களுக்கு விடையளிக்கும் போது, பல மாணவர்கள் உச்சப்புள்ளியைப் பெறுவதில் சிரமப்படுகின்றனர். இதற்குரிய பிரதான காரணம், மாணவர்களில் பலர் அறிந்து வைத்திருக்கும் விடை மிகச்சரியாகவும் அதிக தெளிவாகவும் இல்லை. எனவே விஞ்ஞான முறையில் இடம்பெறும் வினாக்களுக்கு மிகச்சரியாகவும் அதிக தெளிவுடனும் எப்படி விடையளிக்கவேண்டும் என்பதற்கு சில எடுத்துக்காட்டுக்களைத் தருகின்றேன்.

01. விஞ்ஞானத்தின் இயல்பை விளக்குவதற்குக் கூறப்படும் வரைவிலக்கணங்கள் ஐந்தைத் தருக.
1) விஞ்ஞான முறையைப் பயன்படுத்தி பெறப்படும் அறிவு விஞ்ஞானமாகும்.
2) அனுபவமுறை சோதனைமூலம் மெய்ப்பிக்கப்படும் அறிவு விஞ்ஞானமாகும்.
3) அனுபவமுறை சோதனைமூலம் பொய்ப்பிக்கப்படும் அறிவு விஞ்ஞானமாகும்.
4) புறநிலைத் தன்மையான ஆய்வுகள் விஞ்ஞானமாகும்.
5) விஞ்ஞானிகள் சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் அறிவு விஞ்ஞானமாகும். (5 புள்ளிகள்)

02. விஞ்ஞான முறையின் இயல்பை விளக்குவதற்கு கூறப்படும் வரைவிலக்கணங்கள் மூன்றைத் தருக.
1) விஞ்ஞான அறிவைப் பெறுவதற்கு பயன்படுத்தப்படும் முறைகளை ஆய்வு செய்வது விஞ்ஞானமுறையியலாகும்.
2) விஞ்ஞான அறிவான விதிகள் கொள்கைகளைக் கண்டுபிடிப்பதற்கும் இந்த விதிகள் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டு விளக்குவதற்கும் பயன்படுத் தப்படும் முறைகளை ஆய்வுசெய்வது விஞ்ஞானமுறையியலாகும்.
3) விஞ்ஞானம் பிரச்சினையுடன் ஆரம்பித்து இந்த பிரச்சினைக்கு தீர்வுகாணும்வரை பயன்படுத்தப்படும் முறைகளை ஆய்வுசெய்வது விஞ்ஞானமுறையியலாகும். (5 புள்ளிகள்)

03. விஞ்ஞானத்தையும் விஞ்ஞானம் அல்லாததையும் வேறுபடுத்துவதற்கு கூறப்படும் நான்கு கட்டளைக் கற்களை (உரைகல்/எல்லைப்படுத்தும் தத்துவம்) தருக.
1) முறை. 2) பொய்ப்பிக்கும் கோட்பாடு.
3) புறநிலைத்தன்மை. 4) மனப்பாங்கு. (5 புள்ளிகள்)

04. "முறை" மூலம் விஞ்ஞானத்தையும் விஞ்ஞானம் அல்லாததையும் எவ்வாறு வேறு படுத்தலாம்?
விஞ்ஞான முறையான அனுபவமுறை அல்லது நியாய முறையைப் பயன்படுத்திப் பெறப் படும் அறிவு விஞ்ஞானமாகும்.
ஆனால் அனுபவ முறையைப் பயன்படுத்தாது அல்லது நியாய முறையைப் பயன் படுத்தாது வேறு முறைகளைப் பயன்படுத்திப் பெறப்படும் அறிவு விஞ்ஞானம் ஆகும்.
அனுபவ முறையைப் பயன்படுத்தி இயற்கை விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், பிரயோக விஞ்ஞானம் ஆகியன பற்றிய அறிவைப் பெறுவதனால் இத்துறை சார்ந்த பிரிவுகள் விஞ்ஞானமாகக் கருதப்படுவதோடு அனுபவ விஞ்ஞானமாகக் கருதப்படு கின்றது.
இயற்கை விஞ்ஞானத்தில் பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல், தாவரவியல், விலங்கியல், பௌதிகப் புவியியல், அண்டவியல் ஆகிய முக்கிய பிரிவுகளும் (துறைகள்) இதன் உபபிரிவுகளும் அடங்குகின்றன.
சமூக விஞ்ஞானத்தில் பொருளியல், அரசியல், ஒழுக்கவியல், வர்த்தகவியல், சமூகவியல், மானிடவியல், பண்பாட்டியல் ஆகிய முக்கிய பிரிவுகளும் இதன் உபபிரிவுகளும் அடங்குகின்றன.
பிரயோக விஞ்ஞானத்தில் மருத்துவம், பொறியியல், விவசாயவியல், முகாமைத்துவம், நீதியியல், கணக்காய்வு, பிரயோக அரசியல், பிரயோக பொருளியல் ஆகிய முக்கிய பிரிவுகளும் இதன் உபபிரிவுகளும் அடங்குகின்றன.
நியாய முறையைப் பயன்படுத்தி தூயகணிதம், நியம அளவையியல் ஆகிய துறைகள் பற்றிய அறிவைப் பெறுவதால் தூயகணிதமும் நியம அளவையியலும் நியாய விஞ்ஞானமாகும்.
சோதிடம், கைரேகை சாஸ்திரம், எண்சாஸ்திரம், பௌதிக அதீதம், கடந்தநிலை உளவியல், சமயம், கலை, பேய்கள் பற்றிய கதைகள், மறுபிறப்பு பற்றிய விளக்கம், ஆன்மா,மாயை பற்றிய விளக்கம், மூடநம்பிக்கைகள் என்பன விஞ்ஞானமல்ல. ஏனெனில் இவை விஞ்ஞான முறையைப் பயன்படுத்தி அறிவைப் பெற்றவையல்ல. வேறுமுறைகள் மூலம் அறிவைப் பெற்றவையாகும். (10 புள்ளிகள்)

05. கார்ல் பொப்பர் தனது "பொய்ப்பிக்கும் கோட்பாடு" மூலம் விஞ்ஞானத்தையும் விஞ்ஞானமல்லாததையும் எவ்வாறு வேறுபடுத்துகின்றார்?
1) 'அனுபவமுறைச் சோதனை மூலம்' பொய்ப்பிக்கத்தக்க அறிவு விஞ்ஞானம் ஆகும். ஆனால் அனுபவமுறை சோதனை செய்யமுடியாதவையும் பொய்ப் பிக்கத்தக்க பண்பைப் பெறாதவையும் விஞ்ஞானமல்ல.
2) கவர்ப்பாடற்ற விளக்கம் விஞ்ஞானமாகும். ஆனால் கவர்ப்பாடுடைய விளக்கம் விஞ்ஞானமல்ல. (5 புள்ளிகள்)

06. அனுபவமுறைச் சோதனை என்றால் என்ன? மூன்று உதாரணங்களுடன் விளக்குக. அனுபவமுறை பற்றிய விமர்சனத்தையும் தருக.
கருதுகோள்/எதிர்வுகூறல் கூறும் நேர்வுகள், கருதுகோள்/எதிர்வுகூறல் கூறும் விளக்கத்தைப் போல் உள்ளதா என்று அவதானம், பரிசோதனை போன்ற அனுபவ முறைகளைப் பயன்படுத்தி பொருத்தம் பார்ப்பதே அனுவபமுறைச் சோதனையாகும்.
உதாரணம்-1: சூரியனைக் கோள்கள் நீள்வட்டப் பாதையில் சுற்றுகின்றன என்ற கருதுகோளை நுண்ணிய தொலைநோக்கிக் கருவியைப் பயன்படுத்தி அவதான முறை மூலம் சோதிப்பது அனுபவமுறைச் சோதனையாகும்.
உதாரணம்-2: நீர் 100° செல்சியசில் வெப்பமடையும் போது ஆவியாக மாற்றமடையும் என்ற கருதுகோளைக் கருவிகளைப் பயன்படுத்தி பரிசோதனை முறையில் சோதிப்பது அனுபவமுறைச் சோதனையாகும்.
உதாரணம்-3: யுரேனஸ் என்ற கோள் கணித்துக் கூறிய பாதையை விட்டு விலகிச் செல்வதற்குக் காரணம் அதற்கு அண்மையில் வேறொரு புதிய கோள் ஒன்று இருக்கவேண்டும் என்ற எதிர்வுகூறல் விளக்கத்தை அவதான முறைமூலம் சோதிப்பது அனுபவமுறைச் சோதனையாகும்.

உயிர்களுக்கு மரணம் இல்லை. உடல் அழிந்த பின்பு உயிர் மறுபிறப்பு எடுக்கின்றது. அதிகம் தீமை செய்தவனுக்கு நரகலோகமும் அதிகம் நன்மை செய்த வனுக்கு சொர்க்க லோகமும் கிடைக்கின்றது. இதுவும் இதுபோன்ற வேறுகருதுகோள் விளக்கங்களும் அனு பவமுறையில் சோதிக்கமுடியாதவை. எனவே இக்கருதுகோள்கள் விஞ்ஞான கருது கோள் அல்ல.
எனவே விஞ்ஞான முறையியலாளரான கார்ல் பொப்பர், ஹால் ஹெம்பல், ஏனஸ் நேகன் ஆகியோரின் விளக்கத்தின்படி ஓர் அறிவு விஞ்ஞான அறிவாக இருப் பதற்கு அனுபவ முறைச் சோதனை செய்யக்கூடியதாக இருப்பது இன்றியமையாததாகும். அத்தோடு விஞ் ஞானத்தையும் விஞ்ஞானம் அல்லாததையும் வேறுபடுத்து வதற்கு அனுபவமுறைச் சோதனையை முக்கிய கட்டளைக்கல்லாக பயன்படுத்தினர்.
அனுபவமுறைச் சோதனை பற்றி பல விமர்சனங்கள் கூறப்படுகின்றன. இவற்றில் முக்கிய மான இரு விமர்சனங்கள் வருமாறு.
1) உலகின் தோற்றம் பற்றிய மகாவெடிப்புக் கொள்கை (பேரண்ட வெடிப்புக் கொள்கை) உயிரின் தோற்றம் பற்றிய இயற்கை அறிஞர் கோட்பாடு, உயிரின் கூர்ப்புப் பற்றிய சார்ள்ஸ் டார்வினின் பரிணாமவாதக் கொள்கை என்பவற்றுக்கு திருப்திகரமாக ஏற்றுக்கொள்ளத்தக்க அனுபவமுறைச் சோதனை செய்யலாமா என்ற விமர்சனம் உண்டு. இதனால் விஞ்ஞானத்தின் இயல்பை விளக்கும் வரைவிலக்கணத்தில் அனுபவமுறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காது வேறு வரைவிலக்கணங்களும் கூறப்படுகிறது.
2) அனுபவ முறையில் அல்நோக்கல், வழுநோக்கல், முற்கற்பிதம், ஒருபாற்கோடல் ஆகிய வழுக்கள்/போலிகள் இடம்பெறலாம். இதனால் அனுபவ முறைச் சோதனையினால் பெறப்படும் அறிவு கட்டாய உண்மை/நிச்சயமான உண்மை என்ற பண்பைப் பெறுவதில்லை. மாறாக அனுபவமுறைச் சோதனையினால் பெறப் படும் அறிவு நிகழ்தகவானது/பொய்ப்பிக்கத்தக்க பண்பாக இருக்கின்றது என்று நவீன விஞ்ஞான முறையியலாளரான கார்ல் பொப்பர் விமர்சித்தார். அத்தோடு விஞ்ஞானத்தின் இயல்பை விளக்குவதற்கு இந்த விமர்சனத்தைப் பயன்படுத்தி பின்வரும் வரைவிலக்கணத்தைக் கூறினார்.
"அனுபவமுறைச் சோதனைமூலம் பொய்ப்பிக்கத்தக்க அறிவு விஞ்ஞானமாகும்" (5 புள்ளிகள்)

07. கவர்ப்பாட்டு விளக்கம் என்பதன் தாற்பரியம் யாது?
வாக்கியத்தில் கூறப்படும் விளக்கம்/வாக்கியத்தில் பயன்படுத்தும் சொல்லின் விளக்கம் பொருள் மயக்கமுடையதாக, இரட்டுறு கருத்து விளக்கமுடையதாக நேர்வை அறிய முடியாததாக, நேர்வை/நேர்வின் இயல்பை அறிவதில் குழப்பமுடையதாக இருந்தால் இவ்விளக்கம் கவர்ப்பாட்டு விளக்கமாகும்.
உதாரணமாக உளவியல் விஞ்ஞானி சிக்மன்ற் புறொய்ட் கூறிய உளப்பகுப்பு கொள்கையில் உளத்தில் "இட்" "ஈகோ" "சுப்பஈகோ" என்ற மூன்று பகுதிகள் இருப்ப தாகக்கூறி இதன் இயல்புகளை விளக்கினார்.
கார்ல் பொப்பர் என்ற விஞ்ஞான முறையியலாளர் "இட்" "ஈகோ" "சுப்பஈகோ" என்ற சொல்லையும் இதன் விளக்கத்தையும் கவர்ப்பாட்டு விளக்கமாக எடுத்துக் காட்டி னார். ஆதலால் உளப்பகுப்பு கொள்கை விஞ்ஞானமல்ல, போலி விஞ்ஞானம் எனவும் கூறி னார். இதேபோல் கார்ல் மாக்ஸ் என்ற அரசியல் விஞ்ஞானி கூறிய மாக்சிசக் கொள்கை யில் கவர்ப்பாட்டு விளக்கம் இருக்கின்றது என எடுத்துக் கூறினார்.
இயற்கைத் தோற்றப்பாட்டில் முரண்பாடு உண்டு. இயற்கை மாறுவதற்கு இதுவே கார ணம். சிக்கலில் இருந்து எளிமைக்கும் எளிமையில் இருந்து சிக்கலுக்கும் இயற்கை மாறிக் கொண்டு இருக்கும். இந்த மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் முரண்பாடே மூலகாரணம். இந்த முரண்பாட்டுத் தத்துவத்தில் மூன்று விதிகள் கூறினார்.
1) எதிர்மறையின் மறுப்பு. 2) எதிர்மறையின் ஒற்றுமையும் போராட்டமும்.
3) அளவுமாற்றம் பண்புமாற்றத்தையும், பண்புமாற்றம் அளவுமாற்றத்தையும் ஏற்படுத்துகின்றது.
இதில் கூறப்படும் விளக்கம் கவர்ப்பாடானவை என்று எடுத்துக்காட்டி கார்ல் மாக் ஸின் மாக்சிசக் கொள்கை விஞ்ஞானமல்ல, போலி விஞ்ஞானமாகும் என்று விமர்சித்துக் காட்டினார்.
எனவே கார்ல் பொப்பரின் விளக்கத்தின்படி அற்புதமான அழகு, தெய்வீகமான காதல், இந்தப்பழம் புளிக்கும், மாயையில் இருந்து உலகம் தோன்றியது, உண்மையான கற்பு, உன் னதமான ஆன்மா என்பவற்றுக்கான விளக்கமும் இவை போன்ற விளக்கமும் இரட்டுறுக் கருத்துக்களைக் கொண்டுள்ளது, பொருள் மயக்கமுடையது, சுட்டும் நேர்வை திருப்திகர மாக ஏற்றுக்கொள்ளமுடியாது உள்ளது. ஆதலால் இந்த விளக்கம் கவர்ப்பாட்டு விளக்கம் ஆகும். எனவே இவ்விளக்கம் விஞ்ஞானமல்ல. (10 புள்ளிகள்)

08. கார்ல் பொப்பரின் "பொய்ப்பிக்கும் கோட்பாட்டில்" எவற்றை விஞ்ஞானமாகக் கூறினார்?
1) இயற்கை விஞ்ஞானத்தில் உள்ள பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல், தாவரவியல், விலங்கியல், புவியியல், விண்வெளியியல் ஆகியவற்றையும் இவற்றின் உட்பிரிவுகளையும் விஞ்ஞானமாகக் கூறினார்.
2) சமூகவிஞ்ஞானத்தில் உள்ள பொருளியல், அரசியல், ஒழுக்கவியல், வர்த்தகம், சமூகவியல், மானிடவியல், மானிடப் புவியியல், சுகாதாரவியல் ஆகியவற்றை விஞ்ஞானமாகக் கூறினார்.
3) பிரயோக விஞ்ஞானத்தில் உள்ள மருத்துவம், பொறியியல், முகாமையியல், விவசாயவியல், நீதியியல், கணக்காய்வு, அரசியற் பொருளாதாரம் ஆகியன விஞ்ஞானம் என்று கூறினார். (5 புள்ளிகள்)

09. கார்ல் பொப்பர் தனது பொய்ப்பிக்கும் கோட்பாட்டின் மூலம் (எல்லைப்படுத்தும் விதி) எவற்றை விஞ்ஞானம் அல்லாதவை எனக் கூறினார்?
சோதிடம், கைரேகை சாஸ்திரம், எண்சாஸ்திரம், மாந்திரீகம், பேய்கள் பற்றிய கதை, ஆவி/முனிகள் பற்றிய கதை, சமயம், கலைகள், கடந்தநிலை உளவியல், பௌதீக அதீதம், வரலாறு, உளப்பகுப்புக் கொள்கை, மாசிசக் கொள்கை.

10. தூயகணிதத்திற்கும் நியம அளவையியலுக்கும் பொய்ப்பிக்கும் கோட்பாடு ஏன் பொருந் தாது என்று கார்ல் பொப்பர் கூறினார்?
தூயகணிதமும் நியம அளவையியலும் நியாய முறையைப் பயன்படுத்தி நிச்சயமான அறிவைக் கூறுகின்றது. இதனால் நியாய முறையில் பெற்ற அறிவை அனுபவ முறையில் சோதிப்பது பொருத்தமற்றதாகும். அத்தோடு தூயகணிதத்திலும் நியம அளவையியலிலும் கூறப்படும் அறிவு கட்டாய உண்மை/நிச்சயமான உண்மையாகும். இதில் பொய்ப்பிக்கத்தக்க பண்பு இருக்கின்றதா என்று பார்ப்பதும் பொருத்தமற்றதாகும். (5 புள்ளிகள்)

11. பொய்ப்பிக்கத்தக்கவை என்பதன் தாற்பரியம் யாது?
தற்போது அனுபவமுறைச் சோதனையில் நிறுவி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் எதிர்காலத்தில் பொய்ப்பிக்கலாம் என்ற கொள்கையைக் கொண்ட அறிவு பொய்ப்பிக்கத் தக்கவை ஆகும்.
உதாரணம்: சூரியமையக் கொள்கை, இயற்கை அறிஞர் கோட்பாடு, புவியீர்ப்புக் கொள்கை, இயக்கவிதி, கெப்லரின் விதி, கலிலியோவின் விதி, இருபோட்டின் அணுக்கொள்கை, சார்ள்ஸ் டார்வினின் கூர்ப்புக் கொள்கை, பரம்பரியக் கொள்கை, லமார்க்கியின் ஓட்சிசன் பற்றிய கொள்கை, வாயுமூலக்கூற்றின் கொள்கை, கேன்ஸியின் திரம்பல்விதி, மல்தூசின் சனத்தொகைக் கொள்கை, கெயின்சின் பணக்கணியக் கொள்கை என்பன பொய்ப்பிக்கத்தக்க பண்பை உடையன. (5 புள்ளிகள்)

12. விஞ்ஞானத்தில் பொய் என்பதன் அர்த்தம் யாது?
அனுபவ முறைச் சோதனையில் பொருந்தாதவை/ஏற்றுக்கொள்ள முடியாதவை என நிரூபிக்கப்பட்டவை பொய்யாகும்.
பொய்யான கொள்கைக்கு உதாரணம் புவிமையக் கொள்கை, டோல்றனின் அணுக் கொள்கை, லாமார்க்கின் கூர்ப்புக் கொள்கை, புளொஜிஸ்டன் கொள்கை. (2 1/2 புள்ளிகள்)

13. விஞ்ஞான அறிவு பொய்ப்பிக்கத்தக்க பண்புடையதாக இருப்பதற்கு கார்ல் பொப்பர் கூறும் விளக்கம் யாது?
1) விஞ்ஞான அறிவு அனுபவமுறைச் சோதனை மூலம் நிறுவி ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. அனுபவமுறையாக அவதானம், பரிசோதனை போன்ற முறைகள் பயன்படுத் தப்படுகிறது. இந்த முறைகளில் அல்நோக்கல், வழுநோக்கல், முற்கற்பிதம், ஒருபாற்கோடல் ஆகியபோலிகள் இடம்பெறலாம். எனவே போலிகள் இடம்பெறக்கூடிய அனுபவ முறைச் சோதனை மூலம் பெறப்படும் அறிவு நிச்சயமான உண்மையாக இராது. பொய்ப்பிக்கத்தக்க தன்மையுடையதாக இருக்கும்.
2) கருதுகோளை அனுபவமுறையில் பரிசோதனை செய்து ஏற்றுக்கொள்வது உய்த்தறி மூலம் விஞ்ஞான அறிவு பெறப்படுகிறது. இவ்வாறு விஞ்ஞான அறிவை பெற பயன்படுத்தும் உய்த்தறி நியாய முறை பயன்படுத்தப்படுகிறது. இந்த நியாயமுறை அளவையியலின் தர்க்க நியமப்படி வாய்ப்பற்றதாகும். வாய்ப்பற்றதெனின் தரவு உண்மையாயினும் முடிவு கட்டாய உண்மையல்ல என்ற பண்பைக் கொண்டது. எனவே வாய்ப்பற்ற உய்த்தறி முறையினால் பெறப்படும் அறிவு பொய்ப்பிக்கத்தக்க பண்பைப் பெறுகிறது.
கருதுகோள் ஏற்றுக்கொள்ளும் நியாயமுறை வருமாறு:
$(H \rightarrow I) . I \therefore H$
$(P \rightarrow Q) . Q \therefore P$
வாய்ப்பற்ற நியாயமுறை (5 புள்ளிகள்)

14. கார்ல் பொப்பர் வரலாற்றை விஞ்ஞானமல்ல என்று ஏன் கூறினார்?
வரலாற்றில் கூறப்படும் விளக்கம் அனுபவமுறைச் சோதனை [illegible] இருக்கிறது. எனவே இந்த [illegible] (2 1/2 புள்ளிகள்)

15. அனுபவமுறைகள் எவை?
அவதானம், பரிசோதனை, கட்டுப்பாட்டுக்குழு ஆய்வு, தொகுத்தறி அனுமானம், ஒப்புவமை அனுமானம், கள ஆய்வு, அகழ்வாய்வு, பேட்டி, வினாக்கொத்து, ஏடுகளின் ஆய்வு, தொல்பொருள் ஆய்வு, தனியாள் ஆய்வு, மாதிரி ஆய்வு என்பன அனுபவ முறைகளாகும். இந்த முறைகள் இயற்கை விஞ்ஞானம், சமூகவிஞ்ஞானம், பிரயோக விஞ்ஞானம் என்பவற்றைப் பயன்படுத்தி அறிவைப் பெறுகின்றது. (5 புள்ளிகள்)

16. நியாய முறைகள் எவை?
உய்த்தறி அனுமானம், பகுப்பாய்வு இந்த முறைகள் தூயகணிதம், நியம அளவையியலில் பயன்படுத்தப்பட்டு அறிவைப் பெறுகின்றது. (2 1/2 புள்ளிகள்)

17. அனுபவ முறையின் பண்புகள் யாவை?
1) ஐம்புலன் மூலம் அறிவு பெறப்படும்/புலக்காட்சி மூலம் அறிவு பெறப்படும்.
2) நேர்வின் மூன் அனுபவம் பயன்படுத்தப்படும்.
3) பெறப்படும் தரவுகள்/முடிவுகள் நிகழ்தகவுப் பண்புடையதாக/பொய்ப்பிக்கத் தக்க பண்புடையதாக இருக்கும். (2 1/2 புள்ளிகள்)

18. நியாய முறையின் பண்புகள் யாவை?
1) அனுமான நியமங்கள்/நியாயத்தின் நியமங்கள், தர்க்க நியமங்கள் பயன்படுத்தப்படும்.
கணித நியமத்தின் உதாரணம்.
கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல்.
ஒருமுனி 360°, முக்கோணத்தின் கோணங்களின் கூட்டுத்தொகை 180°.
அளவையியல் நியமத்தின் உதாரணம்.
$(P \rightarrow Q) . P \therefore Q$
$(P \rightarrow Q) . \sim Q \therefore \sim P$
$(P \vee Q) . \sim P \therefore Q$
$P \therefore P$
$P \therefore \sim\sim P$
2) உட்கிடையானது. 3) கூறியது கூறல்.
4) வாய்ப்பானது. 5) நிச்சயமான உண்மையாக இருக்கும். (5 புள்ளிகள்)

19. அனுபவ விஞ்ஞானங்கள் எவை?
1) இயற்கை விஞ்ஞானம். 2) சமூக விஞ்ஞானம்.
3) பிரயோக விஞ்ஞானம். (2 1/2 புள்ளிகள்)

20. அனுபவம் அல்லாத விஞ்ஞானங்கள் எவை?
1) தூயகணிதம். 2) தூய அளவையியல். (2 1/2 புள்ளிகள்)

21. கார்ல் பொப்பர் தனது பொய்ப்பிக்கும் கோட்பாட்டின் மூலம் விஞ்ஞானத்தின் இயல்பை எவ்வாறு விளக்குகின்றார்?
கார்ல் பொப்பரின் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களின் தர்க்கம் என்ற நூலில் தனது பொய்ப்பிக்கும் கோட்பாட்டை விளக்குகின்றார்.
பொப்பர் பொய்ப்பிக்கும் கோட்பாட்டில் "அனுபவமுறைச் சோதனை மூலம் பொய்ப்பிக்கத்தக்க அறிவு விஞ்ஞானம்" என்ற விஞ்ஞானத்தின் இயல்பிற்கு வரைவிலக்கணம் கூறுகின்றார்.
இந்த வரைவிலக்கணத்திற்குத் தான் எவ்வாறு வந்தேன் என்பதைப் பின்வருமாறு விளக் கிக் காட்டுகின்றார்.
தற்போது உள்ள விஞ்ஞான அறிவுத் தொகுதியைக் கொண்டு புறத்தேயுள்ள நேர்வை திருப்திகரமாக ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் விளக்கமுடியாது இருப்பதே பிரச்சினை ஆகும்.
விஞ்ஞான விளக்கமில்லாததை உணர்ந்து கொள்ளும் விஞ்ஞானிகள் இதனை ஒரு விஞ்ஞானப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு இதற்கு தீர்வு காணும் நோக்கில் பிரச்சினைக்குரிய குறித்த நேர்வுகள் ஏன், எவ்வாறு, என்ன காரணத்தினால் நிகழ்கின்றது என்ற வினாக் களை எழுப்பி ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றனர். எனவே எந்தவொரு விஞ்ஞான ஆய்வும் பிரச்சினையுடன் ஆரம்பிக்கின்றது/பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஆய்வில் ஈடுபடு கின்றது என்று கார்ல் பொப்பர் கூறினார்.
பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள் விளக்கங்களைப் பெறுகின்றனர்.
இந்தவிளக்கங்களே கருதுகோள்கள் ஆகும். எனினும் இந்தவிளக்கம் நல்லதொரு விஞ்ஞானக் கருதுகோளாக இருப்பதற்கு பிரச்சினையைத் தீர்க்க வேண்டும், விளக்க வேண்டும், எதிர்வுகூறல் இருக்கவேண்டும், விஞ்ஞான ஊகமாக இருக்க வேண்டும், முரண்படாது இருக்கவேண்டும், எளிமையாக இருக்கவேண்டும், கவர்ப்பாடற்றதாக இருக்க வேண்டும், அனுபவமுறையில் சோதனை செய்யக்கூடியதாக இருக்கவேண்டும் என கார்ல் பொப்பர் விளக்கினார்.
இந்தக்கட்டத்தில் கருதுகோள் விளக்கங்கள் விஞ்ஞான ஊகமாக இருப்பதனால் இந்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ளலாம்/நிராகரிக்க வேண்டுமா என்று அறிவதற்காக கருது கோள் விளக்கத்தில் இருந்து உட்கிடையாக எதிர்வுகூறல் விளக்கங்கள் பெறப்படுகிறது. இதனை $H \rightarrow I_1 I_2 I_3$ .... குறியீட்டில் விளக்கினார். $(H \rightarrow I)$
இந்தக் கட்டத்திலும் எதிர்வுகூறல் விளக்கம் விஞ்ஞான ஊகமாக இருப்பதனால் எதிர்வு கூறல் விளக்கத்தையும் ஏற்றுக்கொள்ளலாமா/நிராகரிக்க வேண்டுமா என்பதை அறிவதற்காக இந்த எதிர்வுகூறல்கள் சோதனை செய்யப்படுகின்றது. இங்கு சோதனை என்பதன் கருத்து-
எதிர்வுகூறல் கூறிய நேர்வு, எதிர்வுகூறல் கூறும் விளக்கத்தைப் போல் உள்ளதா என்று அறிவதற்கு அவதானம், பரிசோதனை போன்ற முறைகளைப் பயன்படுத்திப் பொருத்தம் பார்ப்பதே சோதனையாகும்.
சோதனைக்கு அவதானம், பரிசோதனை பயன்படுத்தப்படுகிறது. அவதான முறையிலும் பரிசோதனை முறையிலும் ஐம்புலன் அனுபவமும் உண்டு. நேர்வின் அனு பவமும் உண்டு. ஆதலால் அவதானமும் பரிசோதனையும் அனுபவ முறையாகும். எனவே சோத னையை அனுபவமுறைச் சோதனை என விசேடப்படுத்தி கார்ல்பொப்பர் விளக்கினார்.
அனுபவமுறைச் சோதனையைக் குறியீட்டில் $(H \rightarrow I) . I$ என விளக்கினார்.
விஞ்ஞான ஆராய்ச்சியின் இறுதிக்கட்டத்தில் சோதனையில் பெற்றதரவும் எதிர்வு கூறல் விளக்கமும் பொருந்தியிருந்தால் பிரச்சினையின் தீர்வாக கூறப்பட்ட கருது கோளின் விளக் கம் ஏற்றுக்கொள்ளப்படும்.
அல்லது சோதனையில் பெற்ற தரவும் எதிர்வுகூறல் விளக்கமும் பொருந்தாதுவிடின் பிரச்சினையின் தீர்வாகக் கூறப்பட்ட விளக்கம் நிராகரிக்கப்படும்.
இங்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட கருதுகோள் விஞ்ஞான அறிவாகும். இந்த அறிவைக் கொண்டு விளக்கமில்லா நேர்வுகளுக்கு விளக்கத்தைக் கொடுக்க விஞ்ஞானப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கிறது.
மேற்கூறிய விளக்கங்களின்படி அனுபவமுறைச் சோதனையின் மூலமே விஞ்ஞான அறிவு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எனவே ஓர் அறிவு விஞ்ஞான அறிவா/விஞ் ஞானமல்லாத அறிவா என்று எல்லை வரையறை செய்வதற்கு அனுபவமுறைச் சோதனையை எல்லைப்படுத்தும் தத்துவமாக/விதியாக பயன்படுத்தலாம் என பொப்பர் விளக் கினார்.
எல்லைப்படுத்தும் விதிப்படி அனுபவமுறைச் சோதனையில் ஏற்றுக் கொள்ளப்படும் அறிவு விஞ்ஞானமாகும். ஆனால் அனுபவமுறைச் சோதனையில் ஏற்றுக்கொள்ள முடியா தவை விஞ்ஞானம் அல்ல என்று நிராகரிக்கப்படும். எனவே அனுபவமுறைச் சோதனையை ஒரு கட்டளைக்கல்லாக/உரைகல்லாக எடுத்துக்காட்டி விஞ்ஞானத்தின் இயல்பில் அனுபவமுறைச் சோதனைக்கு முக்கியத்துவம் கொடுத்து விளக்குகின்றார்.
எனினும் விஞ்ஞானக் கருதுகோள் அனுபவமுறைச் சோதனை செய்யக்கூடியதாக இருப்பதற்கு கவர்ப்பாடற்ற விளக்கமாக இருக்கவேண்டும் என்றும் பொப்பர் கூறுகின்றார்.
விஞ்ஞானத்தில் அனுபவமுறைச் சோதனைக்கு மேற்காட்டியவாறு முக்கியத்துவம் கொடுத்த போதிலும் அனுபவமுறைச் சோதனைக்கு பின்வரும் விமர்சனத்தைக்கூறி பொய்ப் பிக்கும் கோட்பாட்டை முன்வைக்கிறார்.
அனுபவமுறைச் சோதனைக்கு அவதானம், பரிசோதனை முறைகள் பயன் படுத் தப்படுகிறது. இந்த முறைகளில் அல்நோக்கல், வழுநோக்கல், ஒருபாற்கோடல், முற்கற்பிதம், ஆகிய போலிகள்/வழுக்கள் இடம்பெறலாம்.
வழுக்களைத் தரவல்ல முறைகளைப் பயன்படுத்தி பெறப்படும் அறிவு கட்டாய உண்மையாகவோ/நிச்சயமான உண்மையாகவோ இருக்காது. பொய்ப்பிக்கத்தக்க பண்புடையதாக இருக்குமென கார்ல் பொப்பர் விளக்குகின்றார்.
இங்கு பொய்ப்பித்தல் என்பதன் தாற்பரியம் யாதெனில் தற்போது அனுபவமுறைச் சோதனையில் நிறுவி ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் எதிர்காலத்தில் பொய்ப் பிக்கத் தக்கதாக வரலாம் என்று கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருப்பது பொய்ப் பிக்கத்தக்கவையாகும்.
கார்ல் பொப்பர், விஞ்ஞான அறிவு பொய்ப்பிக்கத்தக்கதாக இருப்பதற்கு இன்னொரு விமர்சனத்தையும் கூறுகின்றார்.
பிரச்சினையின் தீர்வாக கருதுகோள் கண்டுபிடிக்கப்படுகிறது. பின்பு கருதுகோளுக் குள் இருந்து உட்கிடையாக எதிர்வுகூறல் பெறப்படுகிறது. தொடர்ந்து எதிர்வு கூறல்கள் அனுபவமுறையில் சோதிக்கப்படுகின்றது. இறுதியாகச் சோதனை பொருந்தி வருகின்ற போது பிரச்சினையின் தீர்வாக கருதுகோள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.
இங்கு பின்வரும் நியாயமுறை பயன்படுத்தப்படுகின்றது என பொப்பர் விளக்னார். கருதுகோளின் விளக்கத்தை ஏற்றுக்கொள்ளலாம் எனின் கருதுகோளுக்குள் இருந்து பெற்ற எதிர்வுகூறல் விளக்கத்தையும் எற்றுக்கொள்ளலாம்.
$(H \rightarrow I)$
சோதனையில் எதிர்வுகூறல் விளக்கம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
$(H \rightarrow I) . I$
எனவே பிரச்சினையின் தீர்வாக முன்வைக்கப்பட்ட கருதுகோளின் விளக்கத்தை ஏற்றுக் கொள்ளலாம்.
$(H \rightarrow I) . I \therefore H$
இந்த நியாயமுறை அளவையியலின் தர்க்க நியமப்படி கீழ்வருமாறு இடம்பெறும்.
$(H \rightarrow I) . I \therefore H$
$(H \rightarrow I) . Q \therefore P$
இது அளவையியலின் அனுமான விதிப்படி வாய்ப்பற்றதாகும். வாய்ப்பற்ற நியாயத்திற்கு அளவையியலில் கூறப்படும் பண்பு வருமாறு.
தரவு உண்மை எனினும் முடிவு கட்டாய உண்மையல்ல.
எனவே வாய்ப்பற்ற உய்த்தறி நியாய முறையினால் பெறப்படும் அறிவு நிச்சயமான தல்ல. பொய்ப்பிக்கத்தக்க பண்பைப் பெறுகின்றது.
ஆகவே விஞ்ஞான அறிவின் இயல்பு-அனுபவமுறைச் சோதனையில் பொய்ப்பிக் கத்தக் கவை என்று கார்ல் பொப்பர் தனது பொய்ப்பிக்கும் கோட்பாட்டின் மூலம் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களின் தர்க்கம் என்ற தனது நூலில் விளக்கிக் காட்டினார். (உதாரணத் தையும் கூறுக? (20 புள்ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நொத்தாரிஸ் பரீட்சையில் ஒரு தமிழரே சித்தி!

பதிவாளர் நாயகம் திணைக்களம் கடந்த வருடம் நடத்திய நொத்தாரிசு இறுதிப் பரீட்சையில் ஒரேயொரு தமிழரே சித்தியடைந்துள்ளார். இந்தப் பரீட்சையில் 32 பேர் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் 26 பேர் சிங்களவர்கள். ஐவர் முஸ்லிம்கள். ஒருவர் தமிழர். எஸ்.முத்துக்குமாரசாமி என்ற தமிழரே சித்தியடைந்தவராவார்.(1-68)


## கண்ணீர்க் காணிக்கை

எமது கல்லூரியின் 3ஆம் வருட(Part - II) வணிகமாணி மாணவி
வி.தயாநிதி அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் விட்டுணுசாமி**

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வணிகமாணி பகுதி II மாணவர்கள்,
பட்டப்படிப்பு கல்லூரி, யாழ்ப்பாணம்.
(63625)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (30-07-2007)
திங்கட்கிழமை பண்டாரநாயக்க
மாநாட்டு மண்டபத்தில்
நடைபெறும் கொழும்பு
பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு
விழாவில் கணனி விஞ்ஞானத்
துறையில் முதுமானிப்பட்டம்
பெறும் எமது நண்பன்

**அந்தோனிப்பிள்ளை உதயகுமார்**

அவர்களை உளம் கனிந்து
பாராட்டுவதோடு மென்மேலும்
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

NELLIADY.
THE PHONE SHOP,
MODERN STORES,
FRIENDS.
(சி/53307)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வடமராட்சி, கரவெட்டியை வசிப்பிடமாகக்
கொண்டவரும் முன்னாள் Training Officer
(MDTD), Lecturer (ITP, IIS) தற்பொழுது
Enviormental Officer ஆகவும்
கடமைபுரியும் செல்வன்
**அந்தோனிப்பிள்ளை உதயகுமார்** அவர்கள்
இன்று [30-07-2007] கொழும்பில் உள்ள
பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு
மண்டபத்தில் (BMICH) நிகழும் பட்ட
மளிப்பு விழாவில் MSc. in Computer
Science பட்டம் பெறுவதையிட்டு அவரை
வாழ்த்துவதுடன் மேலும் பல
சிறப்புக்களை
உயர்கல்வியில் பெற்றிட
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

செல்வன்
**அந்தோனிப்பிள்ளை உதயகுமார்**
BSc. Dip.in.Public Adm.(Merit),
MSc in Computer Science (University of Colombo)

Holland. (62916) வாழ்த்துபவர் : **சாந்தன்** (அண்ணா).

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**நாகநாதி பொன்னம்பலம்**

தோற்றம்
20.06.1944

மறைவு
28.06.2007

குடும்பத்தின் குலவிளக்காய்
கருணையின் இருப்பிடமாய்
பாசத்தின் பதிவிடமாய் வாழ்ந்த எம் தெய்வமே!.
என்றும் உங்கள் நினைவாக
உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

அந்தியேட்டிக் கிரியைகளும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (30.07.2007) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்திக்கிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.
(சி/53070)
[illegible]

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

## தவறிவிட்டது

நாகலிங்கம், அரியபுத்திரன் என்பவருடைய மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம், வரிப்பத்திரம், விசேட அனுமதிப்பத்திரம் என்பன மானிப்பாய்ச் சந்திக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே. 0776648660
சன்மானம் வழங்கப்படும்.
(63327)

## தவறிவிட்டது

சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய் என்னும் முகவரியைச் சேர்ந்த முருகையா உதயகரன் என்பவருடைய தே.அ.அட்டை (810330597 V) விசேட அ.அட்டை என்பன அடங்கிய கைப்பேர்ஸுடன் மானிப்பாய்க்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் முத்ததம்பி லேன்,மானிப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும், சன்மானம் வழங்கப்படும்.
(63328)

## ஒத்துமாறல்

கல்வியற் கல்லூரி பயிற்சி ஆசிரியர் - (கணிதம்)

வவுனியா கல்வித்திணைகளத்தில் உள்ள பாடசாலையில் கணித ஆசிரியராகக் கடமையாற்றி வருகிறேன். நான் யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்திற்கு ஒத்துமாற விரும்புகிறேன். இது சம்பந்தமாக தொடர்பு கொள்ளவும்.

தி.சபாரத்தினம்,
தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.
T.P.: 0779668110
(C/53073)


## காக்கைதீவில் புதிய வாய்க்கால் அமைப்பு

நவாலி,ஜூலை30

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த காக்கைதீவில் நீரோடும் பாரிய வாய்க்காலொன்று கடந்த 26ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் 35 லட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட இந்த வாய்க்காலை ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் வை.சந்திரராசா தலைமையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் திறந்துவைத்தார். (1-100)

### ஆனைக்கோட்டையில் கண்காட்சி

ஆனைக்கோட்டை ஐக்கிய சனசமூக நிலையத்தினர் நடத்தும் அடைக்கல நாயகி முன்பள்ளி மாணவர்களின் கண்காட்சியும் மலிவு விற்பனையும் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளதாக அந்த பாடசாலையின் தலைவர் யோ. யோண்சிங்கம் தெரிவித்துள்ளார்.

பாடசாலை வளாகத்தில் நடைபெறும் இந்தக் கண்காட்சியைப் பிரதம விருந்தினர் பங்குந்தந்தை அருட்திரு. நேசராசா அடிகளார் காலை 9 மணிக்குத் திறந்து வைப்பார். (1-88)

### காரைநகர் பாடசாலைக்கு 4 லட்சம் நிதி உதவி

காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையின் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக லண்டன் காரை நலன்புரிச் சங்கம் நான்கு லட்சம் ரூபாவை வழங்கி உள்ளது.

எதுவித அடிப்படை வசதிகளுமின்றி கடந்த பல வருடங்களாகப் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படாதிருந்த இப்பாடசாலையில் தற்போது பழைய மாணவர் சங்கத்தால் பிரதான மண்டபம், அறை என்பன சுவர், நிலம் திருத்தி தீந்தை பூசி புனரமைக்கப்பட்டுள்ளதுடன் பாடசாலை வளவைச் சுற்றி கம்பி [illegible] அமைக்கப்பட்டுள்ளது. (1-73)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 18 ★ 05 ★ 1961



உதிர்வு 30 ★ 06 ★ 2007

**அமரர் சங்கரப்பிள்ளை உதயகுமார் (சூட்டி)**

அன்னார் ரஞ்சிதமலரின் பாசமுள்ள கணவரும் புகையிரத நிலைய வீதி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை - ராஜபூபதி தம்பதியரின் பாசமுள்ள மகனும் விஜயகுமார் (கொழும்பு), ராஜகுமார் (பிரான்ஸ்), விஜயராணி(பிரான்ஸ்), ஜெயராணி (பிரான்ஸ்), சிவக்குமார்(மோகன்-U.K.) ஆகியோரின் பாசமுள்ள சகோதரனுமாவார்.

அன்னாரின் விட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மா சாந்திப்பிரார்த்தனையும் இன்று (30-07-2007) திங்கட்கிழமை நடைபெறும். இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ராணி வாசா,
புகையிரத வீதி,
சுன்னாகம்.
(சி/53065)

தகவல்:
ரஞ்சிதமலர் (மனைவி),
சங்கரப்பிள்ளை குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 - 04 - 1928



மறைவு 21 - 07 - 2005

**கார்த்திகேசு செல்லத்தம்பி**
(முன்னாள் ஆனையிறவு உப்பு கூட்டுத்தாபன ஊழியர்)

அன்பால் எம்மை அரவணைத்து
அறிவால் எம்மை உயர்த்தி
பண்பால் பலர் போற்ற பாரினிலே
வாழ்ந்திட்ட எம் தெய்வமே!
ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
ஆறாதய்யா உங்கள் பிரிவு
என்றும் எங்கள் உள்ளங்களில்
நின்றும் நினைத்திடும் ஐயாவே!.

நிரந்தரமுகவரி
சங்கத்தார்வயல், இயக்கச்சி.
தற்காலிகமுகவரி
உசன். மிருசுவில்.
(62956)

நித்தம் உங்கள் பிரிவால் தவிக்கும்
**மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

902 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

சிங்கம் **34 38 43 53**

27-07-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 5070729 - 5085563

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 328,508 | 10/- | 3,285,080/- |
| 2 இலக்கங்கள் | 30,226 | 20/- | 604,520/- |
| 1 இல. + லக்கினம் | 29,931 | 30/- | 897,930/- |
| 2 இல. + லக்கினம் | 2,676 | 100/- | 267,600/- |
| 3 இலக்கங்கள் | 824 | 500/- | 412,000/- |
| 3 இல. + லக்கினம் | 59 | 5,000/- | 295,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 6,162,130/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 392,233 | | 7,185,630/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,733,900/-

தொடர் இல.4196753 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2007 ஜூலை மாதம் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கேகாலை | 5074950-9-79 |
| கொழும்பு | 5083218-8-15 |
| திருகோணமலை | 5075787-7-80 |
| அனுராதபுரம் | 5077558-2-78 |
| களுத்துறை | 5077032-8-11 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## அவமாய் முடிந்து இந்தியாவுக்கு அவமானம் தேடித் தந்த ஒப்பந்தம்

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு முக்கிய திருப்புமுனை நிகழ்ந்து நேற்றுடன் இரண்டு தசாப்தங்கள் - இருபது ஆண்டுகள் - பூர்த்தியாகியிருக்கின்றன.

இலங்கைத் தீவின் அயல் தேசமான இந்திய வல்லாதிக்கம், தனது புவியியல், அரசியல் கேந்திர முக்கியத்துவத்தின் அடிப்படையில் தான் வகுத்த உருப்படியற்ற - அரைகுறை - தீர்வுத் திட்டம் ஒன்றை, இலங்கை இனப்பிரச்சினைக்கான அரசியல் முடிவாக இத்தீவின்மீது வலிந்து திணித்த செயற்பாட்டின் இருபது ஆண்டுகளே இப்போது பூர்த்தியாகியிருக்கின்றன.

இந்திய மேலாதிக்கத்தின் நெருக்குவாரத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் தமது இலட்சியங்களைக் கூடக் கைவிடத் தயாரான ஈழத் தமிழ்த் தலைவர்களின் அரைகுறை ஒப்புதலோடும் -

கொள்கையிலும், இலட்சியத்திலும் பற்றுறுதி மிக்க ஈழத் தமிழ்த் தலைமையைப் பேச்சுக்கு என அழைத்து, புதுடில்லி அசோக் ஹோட்டலில் காவலில் வைத்துக்கொண்டும் -

ஈழத் தமிழரின் தலைவிதியைத் தீர்மானித்து, ஒப்பமிடும் அதிகாரமும் ஆணையும் இந்தியஅரசுத் தலைவருக்கு உண்டு என்ற மேலாதிக்க மமதையோடும் -

இந்த இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை இத்தீவின் மீது 1987, ஜூலை 29 இல் பலவந்தமாகத் திணித்தது நமது அயல் வல்லாதிக்கம்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் தனது நேரடி இராணுவ அதிகாரத்தைத் தமிழர் தாயகம் மீது செலுத்த இந்தியா எடுத்துவிட்ட முடிவு, ஒப்பந்தம் கைச்சாத்தான சில மணி நேரம் கழித்து, இலங்கையின் வடபுலத்தில் 'அமைதிப் படை' என்ற பெயரில் வந்து இறங்கத் தொடங்கிய இந்தியத் துருப்புகளின் நகர்வோடு துல்லியமாக அம்பலமாயிற்று.

1983 இல் இலங்கைத் தீவில் ஈழத் தமிழருக்கு எதிரான பெரும் வன்முறைப் புயலாகக் கட்டவிழ்ந்த ஆடிப்பேரலை அதிர்வு, இத்தீவின் இனப்பிரச்சினையில் இந்தியாவின் நேரடித் தலையீட்டுக்கான அகப்புறச் சூழல்களையும் சாதகமான சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்தித் தந்தது.

தனது அண்டை, அயல் தேசங்களில் அரசியல், இராணுவ ரீதியில் ஸ்திரமற்ற நிலையையும், குழப்பத்தையும் ஏற்படுத்துவதன் மூலம் அப்பிராந்தியங்களில் தனது நேரடித் தலையீட்டை ஏற்படுத்திக் கொள்வதும், தனது பாதுகாப்பை அதன் மூலம் மேம்படுத்தி, தனது அதிகாரத்தை விசாலித்து, விஸ்தரித்து, வியாபித்து நிலை நிறுத்துவதும் இந்திய வல்லாதிக்கத்தின் அப்போதைய அரசியல் இராஜதந்திரமாக இருந்திருக்கக் கூடும்.

இன்று, இலங்கைத் தீவின் ஐக்கியம், ஒருமைப்பாடு, இறைமை குறித்து, இலங்கை அரசை விட அதிக கரிசனை கொண்ட தரப்பாகத் தன்னைக் கருதி, அதனடிப்படையில் அடிக்கடி அறிவிப்புகளை வெளியிட்டு வரும் புதுடில்லி -

தமது தனித் தாயகக் கனவுக்கு உருக்கொடுக்கும் இலட்சிய வெறியோடு வந்த தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு அன்று தஞ்சமளித்து, ஆயுதப் பயிற்சி தந்து, கொழும்புக்கு எதிராகச் செயற்பட ஊக்கமளித்து, வழிகாட்டி, தூண்டியமையும் -

மறுபுறத்தில் அத்தகைய ஈழத் தமிழ் விடுதலைப் போராட்ட இயக்கங்கள், தமது இலட்சிய இலக்கை அடைந்து விடாமல் பார்க்கும் நோக்கில், ஒரே சமயத்தில் பல இயக்கங்களை போஷித்து வளர்த்து, அவற்றுக்கு இடையே மோதல்களையும், சச்சரவுகளையும் உருவாக்கி, எந்த ஓர் இயக்கத்துக்கும் தனித்துச் செயற்படக்கூடிய ஆயுத, போரியல் வலிமை ஏற்படாமல் தடுத்து மட்டுப்படுத்திக்கொண்டு, தனது கைவரிசையை புதுடில்லி காட்டியமை, அதன் அந்த அரசியல் இராஜதந்திரப் போக்கை உறுதிப்படுத்தும் சான்றுகளாகும்.

வாழ்வியல் உரிமைகளுக்கான ஈழத் தமிழரின் சுதந்திரப் போராட்ட எழுச்சியையும், விடுதலைத் தாகத்தையும் இப்பிராந்தியத்தில் தனது வல்லாதிக்க அரசியல் தந்திரோபாயத்துக்கான பலிக்கடாவாகப் பயன்படுத்த முயன்ற புதுடில்லி, இவ்விடயத்தில் எண்ணிக்கையில் மிகக் குறைந்த - அதே சமயம் விடுதலை அவாவில் இரும்பு போன்ற பற்றுறுதி கொண்ட - ஈழத் தமிழினத்தின் எழுச்சி கண்டு மிரண்டது. அந்த எழுச்சியை அடக்குவதற்காகவே இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்ற நாணயக் கயிற்றைத் தமிழர் தரப்பு மீது 'இந்திய அமைதிப்படை'யின் இராணுவ அதிகாரம் மூலம் அது கட்ட முயன்றது.

ஆனால் தனது அரசியல் - புவியியல் நோக்குகளுக்காகவே இந்தியா, ஈழத் தமிழரின் சுதந்திர உணர்ச்சியைத் தூண்டி, வளர்த்து பின்னர் அதைப் பலிக்கடாவாக்கப் பார்க்கிறது என்பதை ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்ட சக்தியான தமிழீழ விடுதலைப் புலிகளும், அதன் தலைமையும் தெளிவாகவும், ஐயம் திரிபுறவும், ஆழமாகவும் புரிந்துகொண்டு, முன்னெச்சரிக்கையாகவும் இலட்சிய உறுதியில் தடுமாறாமலும் நடந்துகொண்டன.

பலிக்கடாவாக்க இந்தியா வளர்த்த ஈழத் தமிழரின் விடுதலை எழுச்சி, இந்தியாவுக்கு 'வளர்த்த கடா, மார்பில் பாய்ந்த கதை' யானது இப்படித்தான்.

ஓரினத்தின் சுதந்திரத் தாகத்தை தன்னுடைய அரசியல், கேந்திர நலன்களுக்கு வசமாகப் பயன்படுத்திக் கொண்டு, அந்த இனத்தை அடிமைத் தளையில் நட்டாற்றில் விடுவதற்கு இந்தியா மேற்கொண்ட வஞ்சகத்தனமான போக்கு, சரித்திரத்தில் மறக்க முடியாத பெரும் அவமான வடுவை அதன் முகத்தில் நிரந்தரமாகப் பொறித்து விட்டிருக்கின்றது.

தனது ஆயிரக்கணக்கான இராணுவத்தினரின் உடலங்களைச் சுமந்தபடி, காயமுற்ற பல்லாயிரக்கணக்கான படையினரை தூக்கிக் கொண்டு, பலத்த ஆயுத தளபாட இழப்புகளோடும் இரண்டரை ஆண்டுகால அவமானப் பட்டறிவோடும் திரும்பவும் இலங்கையிலிருந்து மூடை முடிச்சுகளோடு நடையைக் கட்டவேண்டிய சிறுமை இந்தியாவுக்கு நேர்ந்தது.

கடந்த நூற்றாண்டில் பெரும் போரியல் பின்னடைவுகளைப் பட்டியலிடும் இராணுவ சரித்திர ஆய்வாளன் வியட்நாமில் அமெரிக்காவுக்கும், கம்பூச்சியாவில் சீனாவுக்கும், ஆப்கானிஸ்தானில் ரஷ்யாவுக்கும் ஈழத்தில் இந்தியாவுக்கும் ஏற்பட்ட யுத்தத் தோல்விகளை நிச்சயம் வரிசைப்படுத்துவான்.

இந்த அவமானப் பட்டறிவை இந்தியாவுக்குச் சம்பாதித்துக் கொடுத்த இலங்கை - இந்திய ஒப்பந்தமே நேற்றுடன் இருபது ஆண்டுகளைப் பூர்த்திசெய்திருக்கின்றது.

அந்த ஒப்பந்தத்தில் வரையறை செய்யப்பட்ட வடக்கு - கிழக்கு இணைப்பு என்ற தமிழர் தாயக ஒருமைப்பாட்டை, இப்போது துண்டித்து, அந்த ஒப்பந்த வாசகங்களைத் தூக்கிக் குப்பைக்கூடைக்குள் வீசியதன் மூலம், கொழும்பு அரசு, இருபது ஆண்டுகள் கழித்து தற்சமயம் புதுடில்லியை அவமானப்படுத்தி நிற்கின்றது.

இந்த அவமானங்களுக்கும் அவமாய் முடிந்த விவகாரங்களுக்கும் இந்தியா பிராயச்சித்தம் செய்யப்போவது எங்ஙனம்?

# மணலாறு முகாம்கள் மீது குறிவைக்கின்றனர் புலிகள்

## ஆங்கில வார ஏடு தகவல்

மணலாறில் உள்ள இராணுவ முகாம்கள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதலை நடத்தக் கூடும்.

- இவ்வாறு கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கில வார ஏடான 'த நேசன்' தனது பாதுகாப்பு ஆய்வுப் பத்தியில் தெரிவித்துள்ளது.

அதன் முக்கிய பகுதிகள் வருமாறு:-

இலங்கை விமானப் படையினர் இந்த வாரம் வன்னியில் பல விமானத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தங்கியிருப்பதாக சந்தேகிக்கப்படும் மூன்று இடங்களில் ஒன்றான ஒட்டிசுட்டானில் இருந்து வடமேற்காக உள்ள முதலியார் குளமும் ஒன்றாகும்.

இதேவேளை, மணலாறுப் பகுதியில் படையினர் தம்மைப் பலப்படுத்துகின்றனர் என விடுதலைப் புலிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். அதன் பின்னர் இரு மாதங்களாக மணலாறில் உள்ள எதவெடுநுவெவ கிராமம் விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான மோட்டார் எறிகணைத் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றது.

இதனிடையே விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட கட்டளைத் தளபதியான கேணல் சொர்ணம் தனது இரு பிரிகேட்டுகளுடன் மணலாறு நோக்கி நகர்ந்துள்ளார் என இலங்கை இராணுவ புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது. அவரது படையணி அவசர தேவைகளின் போது உதவும் நோக்குடன் அங்கு நிலைகொண்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் ஒரு பெரும் இராணுவ வெற்றியை அடைய முயன்று வருகின்றனர். பெரும்பாலும் அது மணலாற்றில் உள்ள படை முகாம்கள் மீதான தாக்குதலாக இருக்கலாம். எனினும் வவுனியா மற்றும் மன்னார் பகுதிகள் மீதான தாக்குதலையும் மறுக்க முடியாது. ஏனெனில் அங்கும் விடுதலைப் புலிகள் தமது கனரக ஆயுதங்களை நகர்த்தியுள்ளனர். மன்னாரில் உள்ள நீலச்சேனை நிலைகள் மீதும் அண்மையில் விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தியிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் கட்டளைத் தளபதிகளான பானு, பால்ராஜ், கோபால் மாஸ்ரர், நிசாந்தன் மாஸ்ரர் ஆகியோர் மன்னாரின் மடுப்பகுதிக்கு விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தினால் அழைக்கப்பட்டுள்ளனர்.

### செட்டிக்குளம் தாக்குதலின் நோக்கம்

கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் மதவாச்சி வீதியில் உள்ள செட்டிகுளத்தில் நடைபெற்ற கிளைமோர் தாக்குதலில் இராணுவத்தினர் பலத்த உயிரிழப்பை சந்தித்திருந்தனர். இராணுவத்தினருக்கு சந்தேகம் வராதபடி சைக்கிள் ஒன்றில் கிளைமோர் பொருத்தப்பட்டிருந்தது. இந்தக் கிளைமோர்த் தாக்குதல் கொழும்புக்கு ஒரு செய்தியை வழங்கியுள்ளது. அதாவது இராணுவத்தினருக்கு பாதுகாப்பு இல்லை என்பதே அதுவாகும். இது தற்போது நடைபெற்றுவரும் தாக்குதலுக்கு இராணுவத்தினருக்கென ஆட்களை சேர்க்கும் முயற்சியை நிறுத்தும் நடவடிக்கையாகும்.

1995 ஆம் ஆண்டு மணலாற்றில் உள்ள படை முகாம்களின் மீது விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதலை நடத்தியிருந்தனர். எனினும் அது வெற்றி பெறவில்லை. ஆனால் அதற்கான கணக்குகளை பின்னர் முல்லைத் தீவு படைத்தளம் மீது நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகள் தீர்த்துக் கொண்டனர்.

தற்போது இந்தப் பகுதியை அவர்கள் விமானத்தாக்குதல் மற்றும் ஆழ ஊடுருவும் படையினரின் தாக்குதலில் இருந்து காத்து வருகின்றனர்.

வன்னிப்பகுதி முக்கிய களமுனையாக இருக்கும்போதும் யாழ். குடாநாட்டில் இருந்து படையினரை வெளியேற்றும் தமது பிரதான திட்டத்தையும் விடுதலைப் புலிகள் கைவிடவில்லை. மேலும் கிழக்கில் உள்ள பேராறு, கும்புறுப்பிட்டி, மணிராசகுளம், திரியாய் ஆகிய பகுதிகளில் விடுதலைப் புலிகள் ஊடுருவியிருக்கின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன - எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சங்கிலி அறுத்த சம்பவத்தில் தொடர்புடைய மற்றவரும் கைது!

யாழ்ப்பாணம்,ஜூலை30

சுன்னாகம், சூராவத்தை அம்மன் கோயிலுக்கு சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த பெண்ணின் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பி ஓடிய நபரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப பெண்ணைப் பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பெண்ணின் சங்கிலியை அறுத்ததும் பெண் கூக்குரல் இடவே, மக்கள் கூடி மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்தவரை பிடித்த சம்பவம் இம்மாதம் 26ஆம் திகதி இடம்பெற்றது தெரிந்ததே.

அவரிடம் இருந்து சங்கிலியும் மீட்கப்பட்டிருந்தது. ஆனால் அடுத்தவர் மோட்டார் சைக்கிளுடன் தப்பி விட்டார். பொதுமக்களால் பிடிக்கப்பட்டவரை விசாரணை செய்த சுன்னாகம் பொலீஸார் மோட்டார் சைக்கிளுடன் ஓடியவரையும் கைதுசெய்துள்ளனர்.

கோப்பாயைச் சேர்ந்த பிரஸ்தாப நபர்கள் இருவரும் மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

இருவரையும் அடுத்த மாதம் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## மரியன்னை ஆலயத்தில் நன்றி வழிபாடு இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை30

யாழ்.மரியன்னை பேராலய அபிஷேக நேரத்தை நினைவுகூரும் முகமான நன்றி வழிபாடும் நற்கருணை ஆசீரும் இன்று மாலை 5 மணிக்கு ஆலயத்தில் இடம்பெறவுள்ளன.

பேராலய அருட்பணிச் சபையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. (அ-1)

## பிக்கு எம்.பிக்களை ரணில் கண்டித்தார்; ஐ.தே.க. பொருளாளர் திலக் விலகினார்!

கொழும்பு,ஜூலை30

ஐ.தே.கட்சியின் பொருளாளரான திலக் கருணாரத்தின தமது பதவியில் இருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகளில அதிருப்தி தெரிவித்தே அவர் பதவி விலகியதாகக் கூறப்படுகிறது.

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பௌத்த பிக்குமார் வரி விலக்களிக்கப்பட்ட வாகனங்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்தமை தொடர்பாக அவர்களை விமர்சிக்கும் வகையில ரணில் கருத்து வெளியிட்டதாலும் -

குடுமிமலை மீட்கப்பட்டமையை ரணில் விமர்சனம் செய்து எதிராகக் கருத்து வெளியிட்டதாலும் - அதிருப்தியடைந்தே திலக் கருணாரத்ன பதவி விலகியுள்ளார்.

இவ்விரு விடயங்களுக்கும் ரணில் மன்னிப்புக் கோரினால் கட்சியிலிருந்து பதவிவிலகும் தமது முடிவை வாபஸ் பெறுவதாக அவர் கூறியிருந்தார்.

ஆனால் கட்சித் தலைவர் விக்கிரமசிங்க கருணாரத்னவின் நிபந்தனைகளை ஏற்க மறுப்புத் தெரிவித்ததை அடுத்து திலக் பதவி விலகினார் என்று தெரிவிக்கப்பட்டது.

திலக் கருணாரத்தின சிஹல உறுமயவின் நிறுவுநராகவும் பின்னர் ஜாதிக ஹெல உறுமயவின் அமைப்பாளராகவும் இருந்தவர். அதிலிருந்து பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்தார். (அ-1)

## யாழ்.வைத்தியசாலைக் குறைபாடுகள்: அறிக்கை சமர்ப்பிக்க அமைச்சர் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை30

யாழ்.போதனா வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளுக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள விவரமான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாவட்ட சுகாதாரப் பணிப்பாளரைப் பணித்துள்ளார்.

இதுதொடர்பாக அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.போதனா வைத்தியசாலையில் தற்போது நிலவுகின்ற அத்தியாவசியக் குறைபாடுகள் தொடர்பில் பலர் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து இக்குறைபாடுகளைத் தீர்க்க அமைச்சர் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

தற்போதைய நிலையில் இரத்தப் பரிசோதனைகள் உட்பட முக்கிய பரிசோதனைகள் பலவற்றை வெளியில் தனியார்துறை சார்ந்த மருத்துவமனைகளில் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகி வருவதாக அமைச்சருக்கு பலர் முறைப்பாடுகளை முன்வைத்தனர்.

இவ்விடயம் தொடர்பில் மாவட்ட சுகாதாரப் பணிப்பாளருடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட அமைச்சர், யாழ்.போதனா வைத்தியசாலையில் தற்போது நிலவும் குறைபாடுகள் தொடர்பில் தமக்கு உடனடியாக அறிக்கையினை சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார். அத்துடன் கொழும்பில் உரிய தரப்பினருடன் உடன் தொடர்புகொண்டு இக்குறைபாடுகளைத் தீர்க்க தக்க நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் - என்றுள்ளது.

## நாளை

| | |
|---|---|
| ஆடி - 15 | செவ்வாய்க்கிழமை 31.07.2007 |
| திதி : பிரதமை | காலை 06.17 |
| நட்சத்திரம் : | அவிட்டம் பின்னிரவு 2.26 |
| அ.நேரம் | : 10.33 - 12.03 |
| இராகுகாலம் | : 03.03 - 04.33 |

## கிராம சேவையாளர் வெற்றிடங்களை விரைவில் நிரப்புவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை30

நாடு முழுவதும் காணப்படும் கிராம அலுவலர்கள் வெற்றிடங்கள் வெகு விரைவில் நிரப்பப்படவுள்ளதாக பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே கிராம அலுவலர்களை தெரிவு செய்வதற்கான பரீட்சை, பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 1900 கிராம அலுவலர்களுக்கு மேற்பட்ட வெற்றிடங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்.குடாநாட்டில் மட்டும் 125 இற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் உள்ளன.

குடாநாட்டில் தற்போது அனைத்துப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களிலும் கிராம அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் பரவலாக காணப்படுகின்றன. (1-68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருள்களை அதிக விலைக்கு விற்ற ப.நோ.கூ. சங்கங்கள் மீது விசாரணை

## யாழ்.செயலகத்தில் இன்று இடம்பெறும்

யாழ்ப்பாணம்,ஜூலை 30

குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களை அதிகரித்த விலையில் விற்றமை, பொருள்களை கையிருப்பில் வைத்திருக்காமை தொடர்பாக மக்களிடம் இருந்து கிடைத்த முறைப்பாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களின் நிர்வாகங்கள் மீதான விசாரணை யாழ்.செயலகத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

அரிசி, சீனி, கோதுமை மா, பால் மா போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலைகளை விட அவற்றை கூடுதல் விலைக்கு விற்றமை தொடர்பாகவும் -

சங்கக் கிளைகளில் பொருள்களைக் கையிருப்பில் வைத்திருக்காமல் தனியாருக்கு விற்பனை செய்தமை தொடர்பாகவும் மக்களிடம் இருந்து பல முறைப்பாடுகள் செயலகத்துக்கு கிடைத்துள்ளன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் இயங்கும் ப.நோ.கூ.சங்கங்களின் நிர்வாகத்தினரை அரச அதிபர் இன்று விசாரணைக்கு அழைத்துள்ளார். (அ-1)

# ஆள்கடத்தலுடன் தொடர்புடைய இருவர் கொட்டாஞ்சேனையில் கைது

கொழும்பு, ஜூலை 30

பல்வேறு கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்கள் எனக் கூறப்படும் இரு தமிழர்களைக் கைது செய்திருக்கும் கொட்டாஞ்சேனைப் பொலிஸார் அவர்கள் மீது கொலைக் குற்றச்சாட்டு சுமத்தி வழக்குப் பதிவு செய்திருக்கின்றனர்.

கொட்டாஞ்சேனை - ஜம்பட்டா வீதியில் வசிக்கும் டாக்டர் ஒருவரின் மகனான - இந்தியாவில் பொறியியற் கற்கையை கற்றுவரும் இளைஞனை கொழும்பில் வைத்து கடத்தி - முன்னர் 50 லட்சம் ரூபாவை கப்பமாகக் கோரினார் என்றும்- அவரைக் கொலை செய்தனர் என்ற சந்தேகத்தில் இந்த இருவரும் கைதாகியுள்ளனர். இவர்கள் இருவரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டுவிட்டனர் என்றும் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனைத் தொடர்ந்தே வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

இளைஞனைக் கொலை செய்துவிட்டு அவிசாவளைப் பகுதியில் புதைத்தனர் எனத் தெரிவித்த அவர்கள் புதைத்த பகுதியையும் பொலிஸாருக்குக் காட்டினர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட இருவரிடமும் கொட்டாஞ்சேனைப்பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தனியாரிடம் பொருள் கொள்வனவு செய்ய செயலகத்தின் அனுமதியைப் பெற வேண்டும்

## நேற்றைய கூட்டத்தில் அரச அதிபர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 30

தனியார் வர்த்தகர்களிடம் இருந்து ப.நோ.கூ. சங்கங்கள் பொருள்களை கொள்வனவு செய்து விற்பனை செய்வதாயின், செயலகத்தில் முன்அனுமதி பெற வேண்டும்.

சகல ப.நோ.கூ. சங்கங்களுக்கும் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் மேற்கண்ட அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

சங்கங்களின் பொது முகாமையாளர்களுடன் நேற்று செயலகத்தில் நடத்திய கலந்துரையாடலின் போதே அரச அதிபர் மேற்கண்டவாறு அறிவுறுத்தி உள்ளார்.

அத்தியாவசியப் பொருள்களான அரிசி, சீனி, கோதுமை மா, பால்மா போன்ற பொருள்களை சகல பாவனையாளர்களும் செயலகம் நிர்ணயித்த விலைகளில் பெற்றுக் கொள்வதை ப.நோ.கூ.சங்கங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

சங்கத்துக்கு பொருள் கொள்வனவு செய்ய வரும் பாவனையாளரை எக் காரணம் கொண்டும் பொருள் கையிருப்பில் இல்லை எனத் திருப்பி அனுப்பக் கூடாது.

பங்கீட்டு அட்டைகளில் பதிவு செய்து பொருள்களை வழங்க வேண்டும். பாவனையாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்யாமல் தனியாருக்குப் பொருள்களை வழங்குவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

செயலகம் விடுக்கும் அறிவுறுத்தல்களைக் கவனத்தில் எடுத்துச் செயற்படாத சங்கங்களுக்கான பொருள் விநியோகம் நிறுத்தப்படும்.

தனியார் வர்த்தகர்களிடம் இருந்து பொருள்களை ப.நோ.கூ. சங்கங்கள் கொள்வனவு செய்வதாயின் செயலகத்தின் அனுமதியைப் பெற வேண்டும். பொருள்களின் விலை விவரங்களை செயலகத்தில் சமர்ப்பித்து அனுமதி பெற வேண்டும் - என்று அரச அதிபர் நேற்றைய கூட்டத்தில் தெரிவித்தார். (அ-1)

# அரசியல் கட்சியாக அங்கீகரிக்க கருணா குழுவினருக்கு மறுப்பு

கொழும்பு, ஜூலை 30

இலங்கை இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவான கருணா குழுவை அரசியல் கட்சியாக பதிவுசெய்ய அரசு மறுத்துள்ளது என கொழும்பு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அந்தத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கருணா குழு தம்மை அரசியல் கட்சியாக பதிவுசெய்ய வேண்டும் என்று கடந்த 2004 ஆம் ஆண்டு ஒக்டோபர் 12ஆம் திகதி தேர்தல் திணைக்களத்திடம் மனு கையளித்திருந்தது. 3 ஆண்டுகளாகிவிட்ட நிலையிலும் ஒரு கட்சியாக அதனை திணைக்களம் பதிவு செய்யவில்லை.

கடந்த ஜூலை 10ஆம் திகதி தேர்தல் திணைக்களத்தினால் 53 அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதில் கருணா குழுவினர் பெயர் இடம்பெறவில்லை.

கருணா குழுவினர் அரசியல் கட்சியாக பதிவு செய்யக்கோரி விண்ணப்பித்த காலத்துக்குப் பின்னர் விண்ணப்பித்த கட்சிகள் கூட அரசியல் கட்சிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் தேர்தலில் அங்கீகரிக்கப்படாத குழுவினர் 'சுயேட்சை குழுவினராக' போட்டியிட வாய்ப்புள்ளது என தேர்தல் திணைக்கள பிரதி ஆணையாளர் பி.எம்.சிறீவர்த்தன தெரிவித்துள்ளார்.

கருணா குழுவை அரசியல் கட்சியாக அரசு அங்கீகரிக்க மறுத்திருப்பதன் மூலம் அக்குழுவினரின் அரசியல் கனவை அக்குழுவை உருவாக்கிய அரசே உடைத்து நொறுக்கியிருக்கின்றது என்று கொழும்பு அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (சி)

# 17 தொண்டு நிறுவனப் பணியாளர் நினைவு நிகழ்வில் ஐ.நா. அதிகாரி

கொழும்பு,ஜூலை 30

மூதூரில் கொல்லப்பட்ட 17 அரச சார்பற்ற பணியாளர்களின் முதலாமாண்டு நினைவு நிகழ்வில் பங்கேற்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோல்மஸ் இலங்கைக்கு வருகை தரவுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒகஸ்ட் ஆறாம் திகதி இலங்கைக்கு அவர் பயணம் மேற்கொள்கிறார். ஒகஸ்ட் 6 ஆம் திகதி வருகைதரும் இவர் 9ஆம் திகதி வரை இலங்கையில் தங்கிநிற்பார். கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை வளாகத்தில் அரச சார்பற்ற பணியாளர்கள் படுகொலையின் முதலாண்டு நினைவு நிகழ்வு நடத்த 'அக்சன் பார்ம்' அமைப்பு முடிவு செய்துள்ளது. ஆனால் இந்த முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வுக்கும் ஐ. நா. அதிகாரியின் வருகைக்கும் எந்தவித தொடர்புமில்லை என்று கொழும்பில் உள்ள ஐ. நா. அலுவலகம் கூறியது என ஆங்கில ஏடு ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானப் பணியாளர்களின் படுகொலைகள் தொடர்பாக ஐ. நா. உள்ளிட்ட அனைத்துலகத்தின் விமர்சனங்களையும் அரசு மறுத்துவரும் நிலையில் ஐ. நா. உயர் அதிகாரியின் வருகை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐ. நா. அலுவலகம் அண்மையில் வெளியிட்ட அறிக்கையில், சோமாலியா, சூடான் வரிசையில் இலங்கையிலும் 3,500 பேர் கொல்லப்பட்டும் கடந்த ஒகஸ்ட் மாதத்திலிருந்து 3 லட்சம் பேர் இடம்பெயர்ந்தும் உள்ளனர் எனக் கூறியிருந்தது.

ஐ. நா. பாதுகாப்பு சபையில் கடந்த ஜூன் மாதம் உரையாற்றிய ஜோன் ஹோல்மஸ் இலங்கை அரசு தொடர்பில் மிகக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்தார். குறிப்பாக மனிதாபிமான பணியாளர்கள் படுகொலையை மிகக் கடுமையாக அவர் விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(சி)

## வன்னிக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடுமிமலையை மீட்டெடுத்த கமாண்டோ படையணியின் தளபதி தலைமையில் புதிய தாக்குதல் அணியொன்று உருவாக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னிப்பிரதேசத்தை மீட்டெடுக்கும் படை நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்கும் தேவையான பணிப்புரைகளை வழங்குவதற்குமாக கூட்டுப்படைத் தளபதி எயார் ஷீவ் மார்ஷல் டொனால்ட் பெரேரா மற்றும் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோர் கடந்த 26 ஆம் திகதி வன்னிப் பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டனர். (அ-சி)

## இலங்கை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் சமாதானத்தைக் கட்டி எழுப்புவதற்கான பிரிட்டனின் முயற்சிகள்' என்னும் தலைப்பில் கடந்தவாரம் பிரிட்டிஷ் தூதுவர் டொமினிக் சில்கொட் கொழும்பில் உரையாற்றி இருந்தார். அவர் தம் உரையில் பின்வருமாறு குறிப்பிட் டார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு புதிய ஐக்கிய இலங்கை கட்டி எழுப்பப்படவேண்டும். நாடு முழுவதும் சமாதானம், ஜனநாயக மரபு, மனித உரிமைகள் மீதான மதிப்பு ஆகியவை வலுப்படுத்தப்பட வேண்டும். இந்த நிலைப்பாட்டை எய்துவதற்கு இலங்கைக்கு பிரிட்டன் உதவும். இதுவே அதன் கொள்கை.

சமாதானத்தோடு கூடிய ஐக்கிய இலங்கையில் பாரிய பொருளாதார நலன்களை எதிர்பார்க்கலாம். இன்று பெருந்தொகையான நிதி, யுத்தத் தளபாடங்களுக்காகவும், குண்டுகள், தோட்டாக்கள், ஆயுதங்கள் ஆகியவற்றுக்காகவும் செலவிடப்படுகிறது. புதிய ஐக்கிய இலங்கையில் இந்த நிதியை அபிவிருத்திப் பணிகளில் முதலீடு செய்யலாம்.

அதேவேளை, வடக்கிலும் கிழக்கிலும் எதேச்சாதிகாரமுள்ள ஆட்சி தொடர்வதற்கும் பிரிட்டன் ஆதரவளிக்காது. ஏனெனில், அதனால் நிரந்தர சமாதானம் கிட்டுமென்பதில் எமக்கு நம்பிக்கையில்லை. இலங்கை மீது சமாதானத் திட்டமொன்றை வலுக்கட்டாயமாக சுமத்த பிரிட்டன் எத்தனிக்காது.

அதேவேளை, நாம் உத்தியோக பூர்வ அனுசரணையாளராகவும் மாற முனையவில்லை. அது நோர்வேயின் பங்காகும். நாம் இலங்கை அரசுடன் இணைந்தே செயற்படுவோம் - இப்படி அவர் கூறினார். (சி)

## வெலிக்கடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று அதிகாலை வீடு வீடாகச் சென்று பொலிஸார் நடத்திய இந்தச் சோதனை நடவடிக்கையில் கைதுசெய்யப்பட்ட அனைவரும் விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையே முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பில் மேலக மக்கள் முன்னணியின் பிரமுகர் குமரகுருபரன், மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா மற்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டு சென்றார் என்றும் அறியமுடிந்தது. (சி)

## தெற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போராட்டம் காரணமாக தெற் கில் மூன்று தினங்களுக்கு சந்தைகளில் மீன் விற்பனை இடம்பெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## சிக்குன்குனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'சிக்குன்குனியா' நோயால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சாந்தி சமரசிங்க தெரிவித்துள்ளார். (அ-1)

## கிழக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலைகள் அல்லது திட்டங்களின் விவரங்களை அந்தந்தப் பகுதிக் கிராம அலுவலர்கள், பிரதேச செயலாளருக்கும் அவரூடாக மாவட்டச் செயலருக்கும்(அரச அதிபருக்கும்) சமர்ப்பிக்க வேண்டும்.

செயற்குழுக்களின் தலைவர்களாக இராணுவ அல்லது பொலீஸ் அதிகாரிகளே கடமையாற்றுவர்.

சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள் குறித்து ஆராயப்பட்ட கூட்ட அறிக்கையின் பிரதிகளை குழுவின் தலைவர், கிழக்கு படைத் தலைமையகத்துக்கு அனுப்பவேண்டும் - என்று தமது சுற்றறிக்கையில் மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிப்பிட்டிய மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# முல்லைத்தீவு, மன்னாரில் மீனவர்கள் மீது தாக்குதல்

கொழும்பு, ஜூலை 30

முல்லைத்தீவு நாயாற்றுக் கடலில் மீன்பிடித் தொழிலாளர்கள் மீது கடற்படையினர் நடத்திய தாக்குதலில் சகோதரர்களான தொழிலாளர்கள் இருவர் காயமடைந்துள்ளனர். இதேவேளை, மன்னாரில் கடற்படையினரால் 6 மீன்பிடித் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

முல்லைத்தீவுக் கரையை அண்மித்த கடலில் கடந்த சனிக்கிழமை இரவு தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீன்பிடித் தொழிலாளர்கள் மீது கடற்படையினர் தாக்குதல்நடத்தினர். இத்தாக்குதலில் தனபாலசிங்கம் சுமன் (வயது 22), தனபாலசிங்கம் மனோகரன் (வயது 27) ஆகியோர் காயமடைந்தனர் என்றும், அவர்களின் படகின் எரிபொருள் தாங்கி சேதமாக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோல், கடந்த ஞாயிற்றுக்கிழமை கள்ளப்பாட்டுக் கடற்பரப்பில் தொழிலுக்குச் சென்ற மீன்பிடித் தொழிலாளர்கள் இருவர் கடற்படையினரால் தாக்கப்பட்டனர் என்றும் கூறப்படுகின்றது.

முல்லைக்கடற்பரப்பில் அண்மைய நாள்களாக மீன்பிடித் தொழிலாளர்கள் மீது கடற்படையினர் இவ்வாறான தாக்குதலை நடத்தி வருகின்றனர் என விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மன்னார் கடற்பரப்பில் கடந்த ஞாயிறன்று மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது கடற்படையினரின் இரு படகுகள் அவ்விடத்திற்கு வந்து அவர்கள் மீது தாக்குதல் நடத்தின என்றும் கூறப்படுகின்றது. (சி)

## இலங்கைக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டிருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது. எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் கூட்டுவதற்கு அனுமதிக்க செனேட்சபையில் இவ்விடயம் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது எனவும் அறிய முடிகிறது. (சி)

MY COMPUTER தமிழ் கணனி மாத இதழ்
சகல இடங்களிலும்.
வெளியீடு: SPEED IT net, 021 4591871.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள ...